[illegible]

3

4

TB
O3L6R
M25
181629

643

உ
கணபதி துணை.

# மஹான்களின் சரிதம்.

மலர் 5.

OFFICE OF THE REGIS
27 MAR 1925
MADRAS



தி. கி. சுப்ரமண்யம் அண்டு ஸன்,
கும்பகோணம்.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

ரைட்] 1925. [விலை அணா 6

TS
031,6x
N25
181674

# OPINIONS.

I have carefully gone through "MAHANGALIN CHARITHAM" series 1, 2 and 3. The aim of the publishers, as set forth in the preface. is to cultivate, in young boys and girls, definite principles of conduct and qualities of character which promote the welfare of the individual and the society. The stories, *I dare say*, are adimirably fitted for the realisation of this aim and are interestingly told in simple easy language. Most of the stories have been selected from the lives of great and good men and women and afford striking illustrations of truthfulness, honesty, courage, obedience, kindness, service and other qualities. The printing and the get up are good and the prices moderate. The books deserve to be used by children for supplementary reading a[illegible]d are sure to command a wide popularity.

**(Sd) K S. Vaidyana[illegible] Aiyer** B A. L.T.,

Kumbakonam, March 2, 1925. *Dy. Inspector of Schools,* KUMBAKONAM.

"MAHANGALINCHARITHAM" I read with great pleasure the three little booklets sent to me by messers T. K. Subramaniam & Son. They have been written in excellent style just suited for Elementary school children. Care has been taken in the choice of the subjects and each lesson conveys an excellent moral principle. I am sure that it will meet with success which it deserves.

**(Sd) T. R. Rangaswami Ayyangar** M A. L.T., *Headmaster.*

Banadurai High School, Kumbakonam 16—3—25

உ

கணபதி துணை.

# மஹான்களின் சரிதம்.

மலர் 5.



OFFICE OF THE REGISTRAR
27 MAR 1925
MADRAS

தி. கி. சுப்ரமண்யம் அண்டு ஸன்,
கும்பகோணம்.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

காபிரைட்] 1925. [விலை அணா 6

920.01
379

181629

# முன்னுரை.

"மஹான்களின் சரிதம்" என்ற வரிசையில் வரும் புஸ்தகங்களிலுள்ள கதைகள் பழையனவே. ஆயினும் நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர்களுக்குப்பக்தி, மரியாதை, அன்பு, உண்மை முதலிய நற்குணங்கள் உண்டாகுமாறு அவை இவ்வரிசையில் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. அன்றியும், இவை தஞ்சை ஜில்லா வித்தை இலாகா அதிகாரியாக இருந்த ஸ்ரீமான் C. D. சுப்பிரமணிய செட்டியார் ( M. A., I. E. S. ) அவர்கள் இந்த ஜில்லாக் கல்வி உத்தியோகஸ்தர்களை ஆரம்பப்பாடசாலைகளுக்காகத் தயார் செய்யச் சொன்ன விரிவான பாடதிட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் பெரியோர்களின் சரித்திரங்களாகவே எழுதப்பட்டுள்ளன. இவ்வரிசையில் வேறு பல கதைகள் விரவியிருப்பினும் பெரும்பான்மையை நோக்கி 'மஹான்களின் சரிதம்' என்ற இப்பெயர் கொடுக்கப்பட்டது. அந்தந்த வகுப்புக்களுக்குள்ள ஸ்தோத்திரப் பாடல்களையும் நாகை வட்டம் பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ா-ாஸ்ரீ வே. முத்துஸாமி ஐயர் ( M. A., L. T. ) அவர்கள் வெளியிட்டிருக்கிற விரிவான பாடதிட்டத்தில் உள்ளபடி அச்சிட்டிருக்கிறோம். இப் புத்தகங்கள் வெளிவருமாறு எமக்கு உதவிபுரிந்த கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்களுக்கு நாம் என்றும் நன்றி பாராட்டுவோமாக. நம் நாட்டு வித்தியாபிமானிகள் இதிலுள்ள குற்றங்குறைகளை நீக்கி எமக்கு ஊக்கமளித்து உதவிபுரியுமாறு வேண்டிக்கோள்ளுகிறோம்.

இங்ஙனம்,

கும்பகோணம்
5—3—1925.

**T. K. Subramaniam & Son.**

# பொருளடக்கம்.


| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1 | சுந்தரமூர்த்தி சுவாமிகள். | 1 |
| 2 | குலசேகராழ்வார். | 4 |
| 3 | ஐந்தாம் ஜார்ஜ் மகிபர். | 7 |
| 4 | காளிதாஸர். | 10 |
| 5 | ஸ்ரீ சங்கராசாரியர். | 13 |
| 6 | பட்டினத்தடிகள். | 16 |
| 7 | ஸ்ரீ வித்யாரணியர். | 20 |
| 8 | புகழேந்திப் புலவர். | 22 |
| 9 | ராணி சம்யுக்தை. | 25 |
| 10 | அகல்யா பாய். | 27 |
| 11 | ஸ்வாமி விவேகானந்தர். | 29 |
| 12 | தாதாபாய் நௌரோஜி. | 32 |
| 13 | மகாதேவ கோவிந்தரா நடே. | 36 |
| 14 | பச்சையப்ப முதலியார். | 37 |
| 15 | ஆறுமுக நாவலர். | 40 |
| 16 | ஔவையார். | 42 |
| 17 | தாயுமான ஸ்வாமிகள். | 46 |
| | ஸ்தோத்திரப் பாடல்கள். | 49 |

உ

கணபதி துணை.

# மஹான்களின் சரிதம்.

மலர் 5.

## 1. சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

சைவசமயாசாரியார் நால்வருள் சுந்தரமூர்த்திசுவாமிகள் ஒருவர். இவர் திருக்கைலாயத்தில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்துவரும் நாளில், இவருக்கு ஆலாலசுந்தரர் என்பது பெயர். இவர் ஒருநாள் நந்தவனத்தில் ஸ்ரீ பார்வதிதேவியின் சேடிகளாகிய அனிந்திதை, கமலினி என்னும் இரண்டு யௌவனப் பெண்களைக் கண்டு காதலித்தார். அவர்களும் இவரை விரும்பினர். இதையறிந்த சிவபெருமான் ஆலாலசுந்தரரை நோக்கி, "நீ தென்னாட்டில் மானிடனாய்ப் பிறந்து இப் பெண்களை மணந்து இன்புற்று இங்கு வரக்கடவாய்" என்றார். ஆலாலசுந்தரர் ஈசனை நோக்கி "யான் இல்வாழ்க்கையில் மயங்கும்போது தாங்கள் தயைசெய்து என்னைத் தடுத்தாட் கொள்ளவேண்டும்" என்றுவேண்டினர்; கடவுளும் அவ்வரத்தைத் தந்தருளினார்.

அங்ஙனமேஇவர் திருநாவலூரில் சடையனார் என்னும் அந்தணருக்கும் அவர்மனைவியாராகிய இசை ஞானியாருக்கும் புத்திரராக அவதரித்தார். இக்குழந்தைக்கு நம்பியாரூரர் எனப்பெயரிட்டனர். இவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, சகல கலைகளையுங் கற்று, மணக்கத்தக்க பருவத்தையும் அடைந்தார். இவருக்குப் புத்தூரிலுள்ள சடங்கசிவாசாரியாருடைய புத்தி

ரியை மணம் பேசிமுடித்து, இவரைக் குதிரைமீது ஏற்றிப் புத்தூருக்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது ஈசன் ஒரு கிழப்பிராமணராகவந்து அவரிடம் "இந்தத் திருநாவலூரானுகிய நம்பியாரூரன் எனக்கு அடிமை. அக்காலத்தில் இவனுடைய பாட்டன் எனக்கு எழுதித் தந்தஅடிமை ஓலை இதுவே" என்று உரைத்துக்கூறி அதைக்காட்டினுர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நீ பித்தனு? பிராமணர் பிறருக்கு அடிமையாதலை ஒருவரும் இதுவரையிற் கேள்விப்பட்டதில்லையே; அந்தஓலையைக்கொடு" என்று வாங்கி, அதைக் கிழித்து எறிந்ததின்பேரில், இக் கிழவர் திருவெண்ணெய்நல்லூர் அந்தணர்களிடம் தங்களது வழக்கைத் தீர்க்கவேண்டும் என்று அவரை அழைத்துச்சென்ருர். கிழவர்மொழியைக் கேட்ட அவ்வந்தணர்கள் "பிராமணர் அடிமையானதை நாங்கள் கேட்டதில்லையே" என்று உரைக்க, அக்கிழவர் மூலஓலையை எடுத்து அவர்களிடம் காட்டினுர். அவர்களும் அதை ஒப்புக் கொண்டார்கள். பின்பு அக்கிழவர் சுவாமிகளை அவ்வூர் ஆலயத்துக்குள் அழைத்துச் சென்று மறைந்தார். உடனே சிவபெருமான் சுவாமிகள் முன்தோன்றி, "நாம் உமக்கு உரைத்தபடி தடுத்து ஆட்கொண்டோம்" என்ருர். அப்பால் சுந்தரர் "அடியேன்தேவரீருடைய குணங்களை எடுத்து எப்படிப்பாடுவேன்?" என்று கேட்க, "நீ என்னைப்பித்தன் என்றுமுன் கூறியதை வைத்து பாடுக" என்றுசொல்லி மறைந்தனர். உடனே சுந்தரர்

"பித்தா! பிறை சூடி! பெருமானே! அருளாளா!
எத்தால் மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்;பெண்ணைத் தென்பால்வெண்ணை நல்லூரருள்
அத்தா!உனக்காளாய்இனி யல்லேனெனலாமே"[துறையுள்
என்று பாடினர்.

அப்பால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பலஸ்தலங்களுக்குச் சென்று திருப்பதிகங்களைப்பாடிப் பின்னர் திருவாரூர் அடைந்து சுவாமிதரிசனம்செய்து சுகமாய்வாழ்ந்திருந்தனர். திருக்கைலாயத்தில் இருந்த கமலினி என்னும் மங்கை திருவாரூரில் கணிகையர் குலத்தில் பிறந்து, பரவையார் என்னும் நாமம்பூண்டு மங்கைப்பருவம் அடைந்து விட்டாள். சுந்தரரும் அவளும் ஆலயத்தில் ஒருநாள்சந்தித்துக் காதல்கொண்டனர். ஈசன் அன்றிரவு இருவர்கனவிலும் தோன்றி மணஞ்செய்து கொள்ளும்படி கூறி மறைந்தனர். அவ்வாறே அவர்கள் மறுநாள் சந்நிதானத்தில் மணந்து இன்புற்று வாழ்ந்தனர்.

சில நாட்களுக்குப் பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொண்டை மண்டலத்திலுள்ள க்ஷேத்திரந்தோறும் சென்று திருப்பதிகங்களைப்பாடிக்கடைசியாய்த் திருவொற்றியூரை அடைந்தார். முன்திருக்கைலாயத்தில்சுந்தரமூர்த்தி சுவாமிகள்மீது காதல்கொண்ட மற்றொரு அணங்கான அனிந்திதியார் என்பவர் அத்திருவொற்றியூரில் சங்கிலியார் என்னும் பெயர்பூண்டு சைவவேளாள குலத்தில் அவதரித்திருந்தார். அவர் மங்கைப்பருவம் எய்தியதும்தமக்கு இசைந்த நாயகன் கிட்டாமையால் திருவொற்றியூரர் ஆலயமடைந்து பரமனுக்குத் தொண்டு செய்துவந்தார். ஒருநாள் சுந்தரர் அவளைக்கண்டு காதல்கொண்டு ஈசனிடம் அறிவித்தார். ஈசன் அன்றிரவில் அவ்வூர்ப் பக்தர்களாக கனவில்தோன்றிச் சங்கிலியாரைச் சுந்தரருக்கு மணம் செய்விக்கும்படி ஆக்ஞாபித்தார். இவ்விருவர்களுடைய கனவிலும் தமது கட்டளையைத் தெரிவித்தார். சங்கிலியார் "சுந்தரர் தம்மைவிட்டுப் பிரிவதில்லை" என்று மகிழமாத்தடியில் அவரிடம் சபதம்வாங்கிக் கொண்டு மணந்தார். பிறகு இவ்விருவரும் சுகமே வாழ்ந்திருந்தனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சபதத்தைமீறித் திருவாரூருக்குச்செல்லத் திருவொற்றியூரைவிட்டு அகன்றனர். உடனே சுவாமிகளுடைய இரண்டுகண்களும் பார்வையை இழந்தன. சுவாமிகள் தமது குற்றத்தையறிந்து தமக்குப் பார்வையைக் கொடுக்குமாறு சிவபெருமானை வேண்டிப் பாடினர். இவர் காஞ்சீபுரத்தை யடைந்ததும் பரமனது அருளால் இடக்கண்பார்வை யுண்டாயிற்று. அப்பால் அநேக ஸ்தலங்களை அடைந்து, சிவபெருமானைத் தரிசித்து திருமூலட்டானம் வர வலக்கண்பார்வையையும் பெற்றார்.

இவர் திருவாரூரை அடைந்ததும், சுந்தரர் சங்கிலியாரை மணந்ததைப் பரவையார்கேட்டு மிகக்கோபமும் வருத்தமும் அடைந்தனர். சுந்தரர் இதையறிந்து பரமனிடம்தெரிவிக்க, அவர் அவளதுவருத்தத்தை நீக்க முயன்றார். ஆனால் பயன்படவில்லை. பின்பு சிவபெருமான் தமது சுயரூபத்துடன் பரவையாரிடம் சென்று சுந்தரரை வரவேற்கும்படிச்சொல்ல, அவரும் அங்ஙனமே செய்தார். இருவரும் சிலகாலம் சுகமேவாழ்ந்திருந்து பின்பு சங்கிலியாருடன் இம்மண்ணுலகைவிட்டு, கைலாயத்திற்குச் சென்றுஅங்குச் சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வந்தார்.

---

## 2. குலசேகராழ்வார்.

தென்னாட்டில் சேரநாடும் ஒன்று. அதில் திருவஞ்சைக் களம் என்னும் ஊரில் த்ருடவிரதர் என்னும் ஓரரசர் நெடுநாளாய் மக்கட்பேறின்றி வருந்தி அரசாண்டார்.

அவர் அல்லும் பகலும் தமக்குப் புத்திரப்பேற்றைத் தந்தருளவேண்டும் என்று திருமாலை வேண்டிவந்தனர் பகவான் இவரது வேண்டுகோளுக் கிணங்கி, ஒரு சற்புத்திரரைத் தந்தருளினர். அரசர் அச்செல்வப் புதல்வனுக்குக் குலசேகரன் என்று நாமம் சூட்டினர். குலசேகரர் இளமையிலேயே தாம் கற்கவேண்டிய நூல்களைக் கற்றார். அரசர் இவரது கல்வித்திறத்தையறிந்து, இவருக்கு யுவராஜப்பட்டம் கட்டினர். பின்பு சிலகாலஞ் சென்றபின் அரசர் தமது புதல்வரிடம் நாட்டை ஒப்புவித்துத் தவம்புரியக் காட்டையடைந்தனர்.

குலசேகரர் தமது தந்தையின் பிரிவைக்குறித்து வருந்தினர். பின்பு தேறுதல் அடைந்து, மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தார். அப்பால் தமக்கு இசைந்த மடந்தையை மணந்து, இளை என்னும் ஒரு புத்திரியையும், த்ருடவிரதன் என்னும் புத்திரனையும் பெற்றார். இவர் 'திருமாலல்லால் யாதொரு கடவுளும் இல்லை' என்று எண்ணி, எப்பொழுதும் ஸ்ரீ மகாவிஷ்ணுவைத் தியானித்து வருவார். இவருக்கு ஸ்ரீமத் இராமாயணம் கேட்பதில் ஆனந்தம் அதிகம்.

ஒருநாள் புராணிகர் ஸ்ரீமத் ராமாயணம் வாசித்து வருங்கால் ஆரண்யகாண்டத்தில் "இலங்காபுரி மன்னனான ராவணன் சீதையை வஞ்சகமாய் எடுத்துச் சென்றனன்; ஸ்ரீ ராமர் சீதையைத்தேடித் துணையின்றிச் சென்றனர்" என்று படித்தவுடன், அதிலேயே கவனம் வைத்திருந்த குலசேகரர் தமது சதுரங்கசேனையுடன் ஸ்ரீ ராமருக்கு உதவிபுரிய வேண்டும் என்று புறப்பட்டார். அதுகண்ட புராணிகர், " ஸ்ரீ ராமபிரான் ராவணனைக் கொன்று, அவ

னது சேனையைச்சிதற அடித்துத் தமது பாரியையைமீட்டுச் சுகமாய்த் திரும்பிவிட்டார்'' என்று குலசேகாரிடம்கூற இவரும் வீடு திரும்பினர்.

மற்றொருநாள் புராணிகர் தமக்குப் பதிலாகத் தமது புத்திரரை ஸ்ரீமத் ராமாயணகாலக்ஷேபம் செய்ய அனுப்பினர். அவருக்குக் குலசேகாருக்கு ஸ்ரீ ராமரிடம் உள்ள அன்பு தெரியாது. ஆதலால் ஜனங்களுக்கு மனது உருகும்படி ராவணன் சீதையைத் தூக்கிச்சென்ற விஷயத்தை விரித்துரைக்க, குலசேகார் கோபித்தெழுந்து, தம துசேனைகளுடன் இலங்கைக்குப் புறப்பட்டார். தென்கடலைத் தாண்டி இலங்கையைச் சேரவேண்டும் என்று கழுத்தளவு மட்டும் ஜலத்தில் இறங்கிவிட்டார். இவரது பக்தியைக் கண்ட திருமால் சீதாபிராட்டியாருடன், இவர்முன் பிரத்தியக்ஷமாகித் தாம்வெற்றிப்பெற்றுச் சீதையைமீட்டு வந்ததாகக் கூறினர். இவரும் கரையேற அவரது அடிகளில் வணங்கி நின்றார். அப்பால் இவர்நாடு வந்துசேர்ந்தார். இவருக்கு ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடம் உள்ளபக்தியால் இவர் "பெருமாள்" என்று அழைக்கப்பட்டார்.

குலசேகாருக்கு விஷ்ணுபக்தர்களிடம் அன்பு அதிகம். அவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவார். ஸ்ரீ ராம நவமி உற்சவம் நடந்துவரும் நாளில் இவரது ஊழியர்கள் சிலபக்தர்களை ஒரு நகையைத் திருடிவிட்டதாகக் குற்றஞ்சாட்டினர். இதைக்கேட்ட குலசேகார் மனம் வருந்தி, "அவர்கள் யாதொரு குற்றமும் செய்யவில்லை என்றுநிரூபிக்கிறேன்" என்று கூறிப்பாம்புஇருந்தகுடத்தில் தமது கையை விட்டார். அஃது இவரை ஒன்றும் செய்யவில்லை. இவரது ஊழியர்கள் நடுநடுங்கித் "தாங்கள் செய்த

சூழ்ச்சி இது'' என்று வெளிப்படுத்தித் தங்களை மன்னிக்குமாறு வேண்டினர். பின்பு குலசேகராழ்வார் பல ஸ்தலங்கள் சென்று, பரமனைத்தரிசித்து அவரது திருவடியை அடைந்தார்.

---

## 3. ஐந்தாம் ஜார்ஜ் மகிபர்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியாஸ்தனமில்லை என்னும் புகழ்ச்சொல் வழங்கிவருகிறது. அஃதாவது இவ்விராஜ்யம் உலகம் எங்கும் வியாபித்திருக்கிறது என்பது. இவ்வளவு பெரிய ராஜ்யம் உருக்குலையாமலும் க்ஷீணதசையை அடையாமலும் இருக்கக்காரணமென்ன? ஆங்கிலேயர்களது ராஜதந்திர நிபுணத்துவமும், நீதி தவறாமல் நடத்துவதுமே காரணம். இவை அன்றி அரசர்கள் மிகச்சமர்த்தர்களாகவும் குடிகளை மிக்க அன்புடன் பராமரித்துவருபவர்களாவும் இருக்கிறார்கள். விக்டோரியாமகாராணியாருக்குப்பிறகுஎட்வர்ட் சக்கரவர்த்தியும், அவருக்குப்பிறகுஜார்ஜ்மன்னரும் நமதுநாட்டை ஆண்டுவருகிறார். ஜார்ஜ்சக்கரவர்த்தி 1865-ம் வருஷம் ஜூன்மாதம் 3-ம் தேதி இவ்வுலகின்கண் பிறந்தார். குழந்தைப் பருவமுதற்கொண்டே இவர் நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவர். இளம்பிராயத்தில் இவரது அன்னை அலெக்ஸாண்ட்ராசக்கரவர்த்தினி இவரது தமையனார், இவர் இவர்களுடையபடிப்பைத் தக்க உபாத்தியாயர்களை நியமித்துக் கவனித்துவந்தார். இவருக்குப் படிப்பில் பிரியம் அதிகம். இவர் சுறுசுறுப்புடன் பாடங்களைக் கற்றுவந்தார். சித்திரம் வரைவதிலும், தச்சுவேலை செய்வதிலும், இவருக்குப் பழக்கம் அதிகம். இவர் நீந்து

வதிலும், குதிரை சவாரி செய்வதிலும் மிகத்தேர்ச்சி யடைந்தார். புஷ்பச் செடிகள் வைத்துத் தோட்டம் போடுவதில் இவருக்கு மிக்கப்பிரியம். இவர்தக்கவயது வந்ததும் கப்பல் சைனியத்தில் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தார். இவரது தமையனர் இருந்ததால் இவர் அரச ராவார் என்று அக்காலத்தில் எண்ண இடமில்லை.

இவரது தமையனர் இறந்தபிறகு ராஜ்யபரிபாலன விஷயங்களை ஊக்கத்துடன் அறிந்து கொண்டார். இவர் 1893-ம் ஆண்டு மேரிசீமாட்டியை மணம் புரிந்தார். இவர்களுக்குஐந்து புதல்வர்களும், ஒரு பெண்மணியும் உண்டு. இவரது தந்தை பட்டத்திற்கு வந்ததும் இவருக்கு வேல்ஸ் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டது. இவர் பிரிடிஷ்சாம் ராஜ்யமுழுவதும் விஜயம் செய்து ஆங்காங்குள்ள ஜனங்களின்நடைஉடைபாவனைகளையும் அவரவர்கள் அனுபவிக்கும் சுகதுக்கங்களையும் தாம்நேரில் தெரிந்துகொண்டார். 1905ம் ஆண்டு நமது பரதகண்டத்திற்கு விஜயம் செய்தார். இவர் இங்கு நான்கு மாதங்களிருந்திருக்கிறார். இவர் இந்தச் சொல்பகாலத்துக்குள் இந்தியாமுழுதும் சுற்றிப்பார்த்து சுதேச அரசர்களுடன்பேசி அவர்களுடைய விஷயங்களை அறிந்து கொண்டும், இந்தியபிரபுக்களை அழைத்து அவர்களோடு சம்பாஷித்து ஜனங்களுக்குள்ள குறைகளை அறிந்து கொண்டும் தமது ஜன்மபூமிக்குச் சென்றார். அங்குச்சென்றதும் தமது தந்தையிடத்தும், மந்திரிகளிடத்தும் "இந்தியா விசாலமான தேசம் என்றும், இந்தியர்கள் மிகவும் ஏழைகள்என்றும், ஆனல் மிக்க சாந்தகுண முடையவர்கள் என்றும், மிகவும் அடக்கமாய் ஜீவனம்செய்து வருகிறார்கள் என்றும், அவர்களுக்கு ராஜபக்தி மிகுதி என்றும், இப்பொழுது இருப்பதைவிட நாம் இன்னும் அதிக அன்

புடன் ராஜ்யபரிபாலனம் செய்து வந்தால் அவர்கள் இன்னும் ராஜபக்தியுடன் இருப்பார்கள் என்றும் " உரைத்தார். இவர் சென்னைக்குவந்தது முதல் சென்னையின் ஒரு பாகத்திற்கு ஜார்ஜ்பட்டினம் எனப்பெயரிட்டு இருக்கிறார்கள்.

எட்வர்ட்சக்கரவர்த்தி இறந்ததும் நமதுஜார்ஜ் பட்டத்திற்கு வந்தார். இந்தியர்களை மீண்டும் ஒருமுறை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தமது மனைவியாரோடு 1911 வருஷம் டிஸம்பர்மாதம் 12-ம் தேதி டில்லிமாநகரில் மகுடாபிஷேகம் செய்து கொண்டார். அக்காலத்தில் இந்தியஅரசர்களும், பிரமுகர்களும் அங்குச்சென்று இருந்தார்கள். அத்தினத்தில் நமது தேசத்தில் ஒவ்வோர் ஊரிலும் மகரதோரணங்கள் கட்டிச் சக்கரவர்த்தி தம்பதிகளின் படங்களை எடுத்து ஊர்வலம் வந்தார்கள். இவர் அப்பொழுது "டில்லியை ராஜதானி ஆக்கினார். வித்யாபிவிருத்திக்காக ஐம்பதுலட்சம் ருபாய்க்குக் குறையாமல் செலவு செய்ய எற்பாடு செய்தார். இந்தியர்களுக்கும் ராணுவத்தில்உயர்ந்தபதவிகள் அளிப்பதாகத்தெரிவித்தார்."

1914-ம் வருஷத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் ஜர்மானியர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு கடும்போர் ஆரம்பமாயிற்று. ஆங்கிலேயர்களுக்கு உதவியாக இந்திய ராணுவ வீரர்கள் அக் குளிர்நாடுகளில் தங்களுடைய அசௌகரியங்களையும் கவனியாது மிக்க பராக்கிரமத்துடன் போர்புரிந்து, தங்கள் வீரச்செயலைக் காட்டினார்கள். இந்தியர்கள் துருக்கி, கிழாப்பிரிக்கா முதலிய இடங்களிலும் தங்களது போர்க்குணத்தைக் காண்பித்துஜயம்பெற்றார்கள். நமதுநாட்டார் யுத்தத்திற்காக எராளமான பொருளுதவியைச்செய்து தங்களது ராஜவிச்வாஸத்தைக் காண்பித்தார்கள். இவர்கள்

யுத்தகாலத்தில் செய்த உதவிக்காக நமது சக்கரவர்த்தி நமக்கு ராஜீயவிஷயங்களில் சட்டசபையில் சில சுதந்திரங் களை அளிக்கச்செய்தார். இன்னும் சுதந்திரம் கொடுப்பதாகத் தெரிவிக்கவும் செய்தார். நமது ஜார்ஜ்சக்ரவர்த்தி நீடூழி சுகமே வாழ்ந்து நமக்குச் சர்வ சுதந்தரமும் கொடுக்குமாறு பரமனைப் பிரார்த்திப்போமாக.

"மன்னவர்க்கழகு செங்கோல் முறைமை."

---

## 4. காளிதாஸர்.

பிள்ளைகாள், நாம் வசிப்பது இந்துதேசம். இதற்கு முற்காலத்தில் பரதகண்டம் எனப் பெயர். இது நாகரிகத்தில் அனேக ஆயிரவருஷங்களாக முதிர்ச்சி அடைந்திருக்கிறது. மேனாட்டார்களுடைய நாகரிகங்கள் எல்லாம் சில நூறு வருஷங்களுக்குட்பட்டவைதாம். இந்நாடோ சூரிய குலத்தரசர்கள் ஆள்வதற்கு முன்பேயே தர்மசாஸ்திரத்திலும், கணிதசாஸ்திரத்திலும், வானசாஸ்திரத்திலும், சோதிடத்திலும், பிரகிருதி சாஸ்திரத்திலும், ஏனைய சாஸ்திரங்களிலும் முதிர்ச்சி அடைந்திருந்ததெனத் தெரியவருகிறது. இம்மாதிரி தேர்ச்சி அடைந்திருந்ததற்குக் காரணம் இந்நாட்டு அரசர்கள் அச் சாஸ்திர நிபுணர்களை ஆதரித்துவந்ததே. எகிப்து, கிரீஸ், பாபிலோன் முதலிய நாடுகள் இந்நாட்டார்களுடைய சேர்க்கையால் நாகரிகம்பெற்றன. கிறிஸ்து பிறந்த ஆறாவது நூற்றாண்டில் மால்வா மாகாணத்திலுள்ள உஜ்ஜினி நகரத்தில் மகா பராக்கிரமமுள்ள விக்ரமாதித்திய மன்னர் அரசாண்டார். இவர் கல்வி, கைத்தொழில், வர்த்த

கம் முதலியன விருத்தியடையச் செய்தார். இவர் தம்முடைய பிரஜைகளுக்கும் மற்றவர்களுக்கும் வெகு செளகரியங்களைச் செய்தார்.

இவரது ராஜசபையில் நவரத்னங்கள் என்று வழங்கப் பெற்றஒன்பது வித்வான்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும்ஒவ்வொருசாஸ்திரத்தில்நிபுணர்கள். அவர்கள்:— காளிதாஸர், வராஹமிஹிரர், அமரசிம்மர், வேதாளபட்டி, தந்வந்தரி, வரருசி, சாங்கு, கடகர், பராஷாபனகா என்போர்கள். இவர்களில் காளிதாஸர் என்ற மகா கவியைப் பற்றி ஈண்டுக் கூறுவோம்.

இவ்வுலகின்கண்பிறந்த வடமொழிக்கவிஞர்களுள்சிரேஷ்டர் காளிதாஸரே. இவர்உவமைஅணியைஅமைத்துப்பாடுவதில் வல்லவர். ஆங்கிலத்தில் நாடகங்கள் இயற்றியிருக்கும் ஷேக்ஸ்பியரை இவரைப் போன்றவர் என்று ஒப்பிடுவாருமுளர். இவ்வளவு கியாதியுடன் அழியாப் புகழ் பெற்ற மஹானுடைய பிறப்பு, இறப்பு இவைகளைப்பற்றிய உண்மையான ஆதாரங்கள் இனித்தான் வெளிப்படவேண்டும். ஆதலால், இவரைப்பற்றிப் பெரியோர்கள் கூறியிருப்பதைமட்டும் தெரிந்துகொள்வோம். இவர் எழுதிய கிரந்தங்களில் தம்மைப்பற்றி யாதொன்றும் எழுதவில்லை.

இவர் உஜ்ஜினி நகரத்தில் ஓர் அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் பிறக்கும்பொழுதே மஹாமேதாவி. இவர் உஜ்ஜினியில் அரசாண்ட விக்ரமாதித்தியமன்னனிடம் சமஸ்தான கவியாய்இருந்தார். காளிதாஸருக்கு அரசன் விசேஷ திரவியம் கொடுத்து ஆதரித்துவந்தான். காளிதாஸர் நமது நாடெங்கும் பிரயாணம் செய்திருக்கிறார். இவர் எங்கே சென்றாலும் ஜனங்கள்இவரை மிக்கமரியாதையுடன்நடத்தி, அன்பு பாராட்டி வந்தார்கள். இவருக்குக் காளிதேவி உபாஸனையும் உண்டு.

இவரை அரசன் வறுமையின்றி போஷித்துவந்ததால், இவர் வடஇந்தியாவில் காஷ்மீரம், ஹிமாசலம் முதலிய நாடுகளுக்குப் போயிருந்தார் என்பது இவரது வருணனைக்கவியிலிருந்து தெரியவருகிறது. இவருக்குத் தேகப்பயிற்சி விளையாட்டுகளில் மிகப் பிரியம்; ஏனெனில் இவரது கவிகளில் அவைகளின் பிரயோஜனங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். பூமியின் நிழலால் சந்திரன் மறைக்கப்படுகிறான் என்று கிரகணத்தைக் குறிப்பிடுகிறார். இவர் ஸ்திரீகளை நிஷ்களங்கமான மேன்மையுடன் எடுத்துரைத்தபோதிலும், ஸ்திரீகள் தாமாக நேசிக்கும் கணவர்களை மணக்கலாகாதென ஓரிடத்தில் கூறியிருக்கிறார். இவருடைய நூல்களிலிருந்து இவருக்கு வேதம், வேதாங்கம், ஸ்மிருதி, இதிஹாஸபுராணங்கள், வானசாஸ்திரம், யோகம் இவைகள் நன்றாய்த் தெரியுமென்பது விளங்குகிறது.

இவர் விக்ரமோர்வசியம், மாளவிகாக்னிமித்திரம், சாகுந்தலம், ஆகிய நாடகங்களையும், ரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம் ஆகிய அரிய காவியங்களையும், இயற்றி இருக்கிறார். ஸம்ஸ்கிருதத்தில் செய்யுள் இயற்றுவதில் இவருக்கு ஈடானவர் யாருமில்லை. இவரைக் கவிச்சக்கரவர்த்தி என்று கூறுவது தகும். இவர் காலத்தில் தண்டி என்னும் மகாகவி ஒருவர் இருந்திருக்கிறார். இவர் ஏழாவது நூற்றாண்டில் இருந்ததாகத் தெரிகிறது.*

---

* ( காளிதாஸர் இருந்ததாக வேறு காலத்தையும் சிலர் குறிப்பிடுவர். காளிதாஸர் போஜராஜன் சபையில் இருந்ததாகவும் சிலர் அபிப்பிராயம். காளிதாஸர்என்ற பெயருடன் இரு வேறு புலவர் இருந்தனர் என்னலாம். )

இவரது நூல்களைக் கற்கும் ஐரோப்பிய ஸம்ஸ்கிருத வித்வான்கள் இவரை இந்தியாவின் காவியமாகிய ஆகாயத்தில் என்றும் மங்காத நக்ஷத்திரம் எனக் கூறுகிறார்கள். இவ்வுலகு உள்ளளவும் இவருடைய புகழ் நிலைத்திருக்கும் என்பது நிச்சயம். இனியும் இத்தகைய புகழ் வாய்ந்த காளிதாஸர்கள் நமது தேசத்து மாணவர்களிடைத் தோன்றுவார்களாக.

---

## 5. ஸ்ரீ சங்கராசாரியர்.

ஸ்ரீமத்சங்கராசாரியர் சுமார் இரண்டாயிரத்து நானூற்றிருபது வருஷங்களுக்குமுன் கேரளதேசத்தில் காலடி என்னும் கிராமத்தில் நம்பூதிரி பிராமண வம்சத்தில் அவதரித்தார். இவரது தந்தை சிவஸ்வாமி (சிவகுரு.) தாய் ஸதீதேவி (ஆர்யாம்பாள்.) இவரது தந்தை இவருக்கு ஜாதகர்ம நாமகர்மாதிகளைச் செய்துவிட்டு இவரது மூன்றாவது வயதில் சிவபதம் அடைந்தார். இவரது அன்னை இவரது வித்யாபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். இவரது குழந்தைப் பருவத்தில் ஒரு நாகம் இவரைச்சுற்றிவிளையாடிக்கொண்டிருந்து, எல்லோருங்காண ருத்திராக்ஷமாக மாறியது. இவர் இன்னும் அனேக அற்புதலீலைகளைச் செய்ததாகத் தெரிகிறது.

இவருக்கு ஏழாவது வயதில் உபநயனம் நடந்தேறியது. அதுமுதல் குருசேவை செய்து வேத வேதாங்காதிகளைக் கற்றுவந்தார். ஒரு நாள் பிக்ஷான்னம் வாங்கப்புறப்பட்டு வறுமைநோய் பீடித்திருக்கும் ஓர் அந்தணர் அகத்தில் புகுந்து, "பவதி பிக்ஷாந்தேஹி" என வேண்டினர்.

அவ் வந்தணர் மனைவி "அய்யா பிருமசாரியே, கஞ்சிக்கும் எங்களுக்கு கதி இல்லையே; பிக்ஷான்னம் இடும் அளவு புண்ணியம் எங்களுக்கு இல்லையே" என்று சொல்லி, இவரிடம் ஒரு நெல்லிக்கனியைக் கொடுத்தாள். இவர் உடனே ஸ்ரீதேவியை ஸ்தோத்திரம் செய்ய, பராசக்தி "உமக்கு என்ன வேண்டும்" என்று கேட்டனர். ஸ்ரீ சங்கரர் "இம் மனையாருக்கு வறுமை நீங்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அக்கணமே அவ் வீடுநிறையப் பொன் நெல்லிக்கனிகள் குவிந்தன.

ஒரு நாள் இவர் பூர்ணையாற்றில் நீராடிக்கொண்டிருக்கையில் ஒரு முதலை இவரது காலைப் பற்றிற்று. இவரது தாய் அலறிக்கொண்டுஆற்றைஅடைந்தார். இவர் "அம்மா, இவ் வாபத்துவேளையில் சந்நியாஸம் வாங்கிக்கொண்டாலொழியப் பிழைப்பதரிது. ஆதலால் எனக்கு ஆபத்சந்நியாஸம் எற்பதற்கு அநுமதி கொடுக்கவேண்டும்" என்று வேண்டினர். இவரது தாயாரும் "அப்படியே செய்; ஆனால் நீ உயிர்தப்பிப் பிழைத்தால் எனக்குத் தேக ஸம்ஸ்காரம் செய்யவேண்டும்" என்றுகூறினர். இவர் அவ்விடத்திலேயே துறவறம் மேற்கொண்டார். முதலையும் இவரது காலை விட்டுவிட்டது.

இவர் உடனே தமது அன்னையைவிட்டுப்பிரிந்து, குருவைத் தேடிச் சென்றார். ஸ்ரீ சங்கரர் நர்மதாதீரத்தில் ஸ்ரீ கோவிந்தபகவத்பாதரென்னும் ஆசிரியரை அடைந்து அவரால் தத்வசித்தாந்த மர்மத்தைப் போதிக்கப்பெற்றார்; சந்நியாஸ தீக்ஷையும் செய்விக்கப்பட்டார்; காசிமா நகரத்தையடைந்தார். இவர் அங்கு ஊர்தோறும் சென்று பௌத்த மதத்தைக் கண்டித்துப் பிரசங்கங்கள் செய்து சென்றார்.

இவர் காசிமாநகரில் கொஞ்சகாலத்திற்குள் உத்தமபோத காசிரியர்களிடம் தர்க்கத்திலும், தத்வ ஆராய்ச்சியிலும், இணையற்ற சீஷன் எனப் பெயர்கொண்டார்.

ஒரு நாள் ஸ்ரீ சங்கரர் தமது சீஷருடன் செல்லுகையில் ஒரு பஞ்சமன் சில நாய்களுடன் எதிர்வந்தான். இவரது சீஷர்கள் அவனை விலகச்சொல்ல, அவன், "புலைமை வாய்ந்தது என் சரீரமோ; அல்லதுஎன் ஆத்மாவோ ?" என்று கேட்டான். ஸ்ரீ சங்கரர் "பிரபஞ்சத் தோற்றங்கள் அனைத்தும் ஒரே ஆத்மாவாகத் தெரிகின்றன. சண்டாளனாயினும் இவனே எனக்குக் குரு ஆவன்" என்று கூறினார். உடனே அவ்வுருவுடன் வந்த கடவுள் அச் சண்டாள உருவை மாற்றி, இவருக்கு மகாதேவராகக்காக்ஷி தந்தார். இவர் சூத்திரபாஷியங்களை இயற்றினார்.

இவர் பாதகண்டம் முழுமையும் சுற்றிவரும்பொழுது அநேக பெரியோர்களைச் சந்தித்தார். தட்சிணத்தில் சிருங்கேரியில் ஒரு மடத்தை ஸ்தாபித்து அங்கு ஸ்ரீ சாரதாம்பிகையைப் பிரதிஷ்டை செய்தார். அங்கே பூஜை செய்ய ஒரு சிஷ்யரை வைத்தார். 'தமது அன்னை பிணியால் பீடிக்கப்படுகிறார்' என்று கேள்வியுற்றுத் தாம் மட்டும் காலடி அடைந்தார். இவரைக்கண்டதும் அவ்வம்மையார் மகிழ்வுற்றார். அப்பால் பரலோகம் அடைந்தனர். இவர் தாம் வாக்களித்தபடி தமது அன்னைக்குத் தகனம் முதலான கிரியைகளைச் செய்து முடித்தார்.

இவர் மீண்டும் சிருங்கேரி சென்று தம்முடைய சீஷர்களுடன் யாத்திரையாகப் புறப்பட்டு ஜகன்னாதபுரத்தில் ஒரு மடமும், காஞ்சீபுரத்தில் ஒரு மடமும், துவாரகையில் ஒருமடமும் தோன்றச்செய்து கடைசியாகக் காஷ்

மீரம் சென்று அங்கே "ஸர்வஜ்ஞபீடம்" ஏறி அலங்கரித்தனர். இறுதியில் பதரிக்ஷேத்திரத்தில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்தார். பின்பு அவர் எல்லாமதங்களையும் கண்டித்து சைவம், வைஷ்ணவம் முதலிய ஆறு மதங்களை ஸ்தாபித்தார். இவரது முப்பத்திரண்டாம் வயதில் இமயமலைக்குள் சென்று ஒரு சுரங்கம் வழியாகக் கைலாஸத்திற்கு ஏகினர்.

## 6. பட்டினத்தடிகள்.

பட்டினத்தடிகளை முற்பிறப்பில் குபேரன் என்பார். இவர் சோழநாட்டின்கண் புண்ணிய நதியாகிய காவிரிநதி கடலில் கலக்கும் இடத்தில் சோழராஜர்களுக்குச் சிலகாலம் உறைவிடமாகவும் பிரதான நகரமாகவும் இருந்த காவிரிப்பூம் பட்டினத்தில் வைசியர் மரபில் சிவநேசருக்கும் அவரது பத்தினியாராகிய ஞானகலை அம்மைக்கும் புதல்வராக அவதரித்தனர். இவருக்குத் திருவெண்காடர் எனத் திருநாமஞ் சூட்டினர்கள்.

இவர் தமக்கு ஐந்து வயதாகும் அளவில் தமது தந்தையாரை இழந்தார். ஆயினும் பூர்வஜன்ம பலத்தால் இளமையிலேயே சகல கலைகளையும் கற்றார். இவருக்குச் சிவபூஜையில் அன்பு அதிகம். இவர் இளமையிலேயே கடவுளது திருவருளால் ஒரு பிராமணபிரமசாரியால் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றார். அவரிடமிருந்து பூஜைக்கு ஒரு சிவலிங்கத்தையும் விநாயகமூர்த்தியையும் பெற்றார். குருவுக்குத் தக்ஷிணை கொடுக்க ஒன்றும் இல்லாது பாமனைவேண்ட, தமதுவீடு நிறையப் பொன் குவியல் உண்டாயிற்று.

திருவெண்காடருக்குத் தக்க பருவம் வந்ததும் அவ்வூர்ச் சிதம்பர செட்டியாருடைய அருமைப் புதல்வியைத் திருமணஞ் செய்தார்கள். இவர் தினந்தோறும் சிவபூஜை செய்தும், சிவனடியார்களை உபசரித்தும் தமது இல்லறத்தை நடத்திவரும் நாளில் வாணிகத்தில் விசேஷ திரவியத்தைத் தேடினர்; தமக்கு மக்கட்பேறில்லையே என வருந்தினர்; திருவிடைமருதூர் ஈசனை வேண்டினர்.

இங்கு இவ்வாறிருக்க திருவிடைமருதூரில் சிவனடியார்களாகிய சிவசருமர் என்னும் அந்தணரும் அவர் மனைவியார் சுசீலையம்மாளும் தங்களுக்கு வறுமைநோய்நீங்குமாறு சிவபெருமானை வேண்டினர். சிவபிரான் ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்து அதைக் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள பக்தராகிய திருவெண்காடரிடம் கொடுத்து அதன் எடையளவு பொன்பெற்று வறுமையைத் தீர்த்துக் கொள்ளுமாறு சொன்னார். இவர்களும் அப்படியே செய்து நிறைந்த பொன்னைப் பெற்றனர். அக்குழந்தைக்கு மருதவாணர் எனப் பெயரிட்டனர். அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஜகத் ஜோதியுடன் வளர்ந்து வந்தது. மருதவாணருக்கு வயது வந்ததும் நல்ல ஆசிரியரைத்தேர்ந்தெடுத்து சகல கலைகளையும் பயிற்றுவித்தார்.

மருதவாணருக்கும் பதினாறு ஆண்டு ஆயது. உடனே தீவாந்தரஞ் சென்று வியாபாரத்திலே பொருள்தேட அவாக் கொண்டார். அப்படியே தமது தந்தையாரிடம் அனுமதி பெற்றுச் சென்றனர். மீண்டும் திரும்பிவந்து சிறையிலடைக்கப்பட்டு ஒருவரும் அறியாது திருவிடைமருதூர் சென்று மகாலிங்கத்துட் கலந்தனர்.

அப்பால் திருவெண்காடர் "இது நமதுமகனுற்கொடுக்கப்பட்டது" என்று தமது மனைவியார்கொடுத்த ஒரு பெட்டியைத் திறந்து பார்க்க, அதில் ஒரு காதற்றஊசியும், ஓர் ஓலைநறுக்கும் இருக்கக் கண்டார். அவ் ஓலையில் "காதற்ற ஊசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" என்று எழுதியிருந்தது. திருவெண்காடருக்கு உடனேஞானம்உதயமாகியது. தமது தாயாரைப் பணிந்து "நான் இன்று முதல் இல்லறத்தை ஒழித்தேன்" என்றனர். அவரது அன்னையார் "எனக்கு அந்திய காலம் சமீபித்தது; என் ஈமக்கடனைக் கழித்துச் செல்லலாகாதா?" என்றார். அவரும் சம்மதித்துத் தமது பொருளையெல்லாம் சூறைவிட்டுப் புறப்பட்டனர். இவரது மனைவியார் இவரைப் பின்தொடர "நீ இல்லத்திலிருந்தே சிவபெருமானைத் தொழுது முக்தி யடைவாய்" என்றனர்.

இவர் பொது மண்டபத்திலேயே இருந்து, பசித்தால் பிச்சையெடுத்து அருந்திவந்தார். இவரது தாயார் மரிக்க, உற்றார் அச் சவத்தையெடுத்து மயானம் கொண்டுபோய்ச் சிதையிற்சேர்த்துமீண்டனர். பட்டினத்தடிகள்என்றுபெயர் பூண்ட திருவெண்காடர் தமது கடமையையும், வாக்குதத்தத்தையும் நிறைவேற்றவேண்டி அங்குச்சென்று, சிதையைத் தள்ளி வாழைக்கட்டைகளை அடுக்கினார். தமது அன்னையாரை அதன்மேல் கிடத்தி,

"முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்."

என்பதுபோன்ற பல கவிகளைப் பாடித் தமது ஞானக்கினியால் தகனம்செய்தார்.

அப்பால் இவர் திருவிடைமருதூரையடைந்து அங்கே சிலகாலம் தங்கித் திருவாரூருக்குச்சென்றனர். அங்கே உயிர் மாய்ந்த ஒருசிறுவனைப் பிழைப்பித்தனர். பின்பு இவர் கோகரணம்போய் உஞ்சேனைமாகாளம் அடைந்து மாகாளேச்சுரரைப் பணிந்து, அவ்வூருக்குப் புறத்திலுள்ள கணபதி ஆலயத்தில் இருந்தனர். அன்றிரவில் இவர் நிஷ்டையிலிருக்கையில் அவ்வூர்ப்பர்த்ருஹரிமஹாராஜாவின் அரண்மனையில்களவு செய்யவந்த சிலகள்வர்கள்கணபதிமுன்னால்நின்றுதொழுது, மாலையிட்டுச் சென்றனர். அப்பொழுது இருட்பொழுதாகையால் அம் மாலை யோகத்திலிருந்த அடிகள் கழுத்தில் விழுந்தது.

களவுநடந்த சிறிது நேரத்திற்கெல்லாம் காவலர்கள், கள்வர்களைத் தேடிச்சென்று கணபதி ஆலயத்திலிருந்த பட்டினத்தடிகளைப் பிடித்து உபத்திரவம்செய்து, அரசன்முன் கொண்டு நிறுத்தினர். அரசன் இவரைக் கழுவிலேற்றும்படி ஆக்ஞாபித்தான். இவர் கழுமரத்தடியில் நின்று ஒரு கவி பாடவும், அக் கழுமரம் தீப்பற்றிஎரிந்தது. இதைக் கேள்வியுற்ற அரசன் அடிகள் பாதங்களில் பணிந்து அவரால் உபதேசம் பெற்றான். தனது நாடு, நகர் முதலியவற்றைத் துறந்தான். திருவிடைமருதூருக்குச்சென்றான். இவரேபத்திரகிரியார் எனப்படுபவர். அப்பால் பட்டினத்தடிகள், மீண்டும் திருவிடைமருதூர், சீர்காழி, சிதம்பரம், திருப்பாதிரிப்புலியூர், திருவண்ணாமலை, காஞ்சீபுரம் முதலிய ஸ்தலங்களையடைந்து பரமனைத் தொழுது பாடல்களைப்பாடி இறுதியில் திருவொற்றியூரை அடைந்தனர். அங்கு ஒரு நாள் சிறுவர்கள் மாடுமேய்க்கையில் இவர் அவர்களிடஞ் சென்று, தம்மை ஒரு குழியில் புதைக்கச்செய்து மற்றோர் இடத்தில் கிளம்பினார். இவ்வாறு இரண்டு மூன்று தரம் விளையாட்டுக்

காட்டி, அப்பால் சிவலிங்க வடிவமாக முளைத்து நின்றார். உடனே அவ்வூரார் எல்லோரும் வந்து அடிபணிந்து, சிவ லிங்கத்திற்குப் பூஜைசெய்தனர். இன்றும் திருவொற்றியூ ரில் இவ்வற்புதக்காக்ஷியைக் காணலாம்.

## 7. ஸ்ரீ வித்தியாரணியர்.

ஸ்ரீ வித்தியாரணியருக்கு மாதவர் என்பதும்பெயர். இவர் கி. பி. பதிமூன்றாவது நூற்றாண்டில் தெலுங்குதேசத் தில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் மாயனர் என்பது. தாயார் பெயர் ஸ்ரீமதி. இவருக்குச் சாயனர், சோமநாதர் என்ற இருசகோதரர்கள் இருந்தார்கள். இவருக்கு உபநயன மான பின்பு பன்னிரண்டு ஆண்டுகள் குருகுலவாஸம்செய்து, வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்று, லௌகிக விவகா ரத்திலும் மிகத் தேர்ச்சி அடைந்தார்.

இவர் தமது அறிவுமுதிர்ச்சியால் தவத்திற்குச்சென்று, இலக்ஷ்மிதேவியை உபாசித்தார். ஈசுவரியும் பிரத்யக்ஷ மாகி, "உனக்குத் தனலக்ஷ்மி தவிர மற்ற எல்லாப் புகழும், ஞானமும், வல்லமையும் இந்த ஜன்மத்தில் உண்டாகும்" என்றனர். இவர் உடனே துறவறம்பூண்டார். இவர்நாடெங் கும் பொன்மாரி பெய்யச்செய்தார். வெளியில் கிடக்கும் பொன்னைக்கொண்டு தேவாலயங்கள், மண்டபங்கள், கோபு ரங்கள் முதலியன கட்டுவித்தார்.

இவர் யாதவகுலத்து அரசனான புக்கராஜனுக்கு மந்திரி யாகவும், குலகுருவாகவும் அமர்ந்தார். இவர் அனேக அரு மையான நூல்களை இயற்றினர். அப்பால் இவர் காசிமாநக

ருக்குச் சென்று, ஸ்ரீ வேதவியாசரைத் தரிசித்து மந்திரோபதேசம் பெற்றூர்என்ப. அப்பால் இவர் ஹம்பி என்னும் க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்ரீவித்யாநகரம் என்ற ஒரு நகரத்தை ஸ்தாபிக்க அடிப்படை போட்டார். இலக்ஷ பிராம்மண போஜனம் செய்விக்க ஆயிரக்கால் மண்டபம் ஒன்றைக் கட்டுவித்தார்.

பின்பு இவர் சிங்கேரிக்குச் சென்று அங்கு ஜகத்குருவாக இருந்த ஸ்ரீ பாரதிதீர்த்தரை ஸேவித்தார். இவரது தியாகத்தைக் கேள்வியுற்றிருந்த ஸ்வாமிகள் இவருக்குச் சந்நியாசம் அருளி, வித்யாரண்யர் என்னும் திருநாமமும் சூட்டினூர். பாரதிதீர்த்தருக்குப்பின்பு வித்யாரண்யர் சிங்கேரிக்கு ஜகத்குரு ஆகினர். இவர் தமது குருவின்பெயரால் வித்யாசங்கர தேவஸ்தானம் ஒன்றை ஏற்படுத்தினூர். வித்யாநகர ராஜதானியைப் பூர்த்திபண்ணிப் புக்கராஜனுக்கு அங்குப் பட்டமும் கட்டி, இவனுக்கு "ஹரிஹரராயன்" எனப் பெயரிட்டு, ராஜ்யத்தை அளித்தார். வித்யாநகரத்தைப் பூர்ணமாகக்கட்ட ஸ்ரீவித்யாரண்யர் ஏழுவருஷம் உழைத்தார்.

ஹரிஹரராயன் வேண்டிக்கொண்டபடி தாமே ஸிம்மாஸனம் ஏறி, இருபத்தாறு வருஷம் அரசாண்டார். இவர் தமது அரசாட்சியில் வேற்றரசர்களை வென்று, நாடுகளில் ஏரிகள், கால்வாய்கள் முதலியனவெட்டி, வேளாண்மையை விருத்திசெய்தார்; கைத்தொழில், வணிகம் இவைகளைப் பெருக்கினூர்; சாலைகள் போடுவித்தார்; கோயில்களைக் கட்டுவித்தார்; குளங்களைவெட்டச்செய்தார்; ஆங்காங்குநாடெங்கும் பாடசாலைகளை ஏற்படுத்தினூர்; போர்ப்படையைப் பலப்படுத்தினூர். இவ்விதமாக நாட்டை முன்னேற்றஞ் செய்து, கி. பி. 1362ல் ஹரிஹரராயனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து அவனுக்குப் பட்டம் கட்டினூர். இவ் விராஜ்யம்

வெகுதூரம் பரவியிருந்தது. இதன் பிரதானநகருக்கு விஜய நகரம் எனப் பெயர் வழங்கலாயிற்று. அது துங்கபத்திரை ஆற்றங்கரையில்இருந்தது. இதுவே இராமாயணத்தில்சொல் லப்படுகிற கிஷ்கிந்தை.

வித்யாரண்யர் மீண்டும் இரண்டாம்ஹரிஹரன்நாளிலும் அவனது வேண்டுகோளின்படி சிலகாலம் அரசு புரிந்து, மேற்குக்கரை நாடுகளை ஜயித்தார். மதாசார உண்மைகளை ஜனங்களுக்குப் போதிக்கவேண்டிய மார்க்கங்களைத் தேடினர். இவர் இவ் வுலகின்கண் நூற்றுப்பத்தொன்பது வயதிருந்து, பின்னர் ஒரு குகைக்குள் பிரவேசித்துக் கைலாயத்திற்குச் சென்றார் என்ப.

---

# 8. புகழேந்திப் புலவர்.

புகழேந்திப்புலவர் தொண்டைமண்டலத்திலே பொன்விளைந்த களத்தூரிலே துளுவவேளாளர் குலத்திலே பிறந்தவர்; வரகுணபாண்டியனிடம்இருந்து தமிழ்நூல் பலகற்றுத் தேர்ச்சியடைந்து புலவர் திலகராய் விளங்கியவர்; வெண்பா இயற்றுவதில் சிறந்தவர்; பாண்டியனது ஆஸ்தான வித்வானாக இருந்தவர்.

வரகுண பாண்டியன் மகளுக்குப் புகழேந்திப் புலவர் கல்வி கற்பித்து வந்தார். அக் கன்னிகையைக் குலோத்துங்க சோழனுக்கு மணம் செய்வித்து, மற்றச் சீதனங்களுடன் புகழேந்திப் புலவரையும் கொடுத்தனன். குலோத்துங்க சோழன் உறையூரில் வசித்தனன். அவனுடன் புகழேந்திப் புலவரும், ஒட்டக் கூத்தரும் இருந்து வந்தார்கள்.

ஆனால் ஒட்டக்கூத்தர் பாண்டியன் மகளைச் சோழனுக்கு நிச்சயம் செய்ய வந்தநாள் முதல் ஒட்டக் கூத்தருக்கும் இவருக்கும் பகைமை ஏற்பட்டு விட்டது. ஆதலின் இவர் உறையூர் வந்ததும் இவரிடம் பொறாமை கொண்டு, ஒட்டக் கூத்தர் இவரை அவமானம் செய்யச் சமயம் பார்த்திருந்தனர்.

சோழநாட்டில் முரணூரிலே சிற்றரசனாக இருந்த சந்திரன் சுவர்க்கி என்பவன் நளன் சரிதையை வெண்பாக்களாகப் பாடித்தருமாறு புகழேந்திப் புலவரைக் கேட்க, அவரும் பாடி அரங்கேற்றினர். அச்சமயம் ஒட்டக்கூத்தரும் அங்கு வந்திருந்தார். இவ்விருவருக்கும் அங்கும்தர்க்கமுண்டாகி, ஒட்டக்கூத்தர் அவமானம் அடைந்தனர். அப்பால் ஒருநாள் ஒட்டக்கூத்தர், புகழேந்தியின்மீது பொய்க் குற்றம் சாட்டி அரசனிடம் அறிவிக்க, அவன் விசாரியாது புகழேந்தியாரைச் சிறையிலடைத்தனன்.

புகழேந்திப்புலவர் சிறைச்சாலையில் உணவின்றி வருந்த நேர்ந்தது. அப்போது இவர் பாரதக்கதைகள் சிலவற்றைப் பவளக்கொடிமாலை முதலிய சின்னூல்களாகப் பாடிக்கொண்டிருந்தனர். அவ்வூர் மாதர்கள் தண்ணீருக்குச் செல்லும் போது அதைக்கேட்டு இவர்பால் இரக்கமுற்று, அரிசி, காய், கறி இவைகளைக் கொடுத்து உதவி வந்தார்கள். இவர் அவைகளைச் சமைத்து உண்டார்.

வருஷந்தோறும் ஒருநாள் இரவில் சோழன் ஒட்டக் கூத்தரோடு யானைமீதேறி குடைபிடித்து ஊர்வலம் வருவது வழக்கம். அப்படிச் சிறைச்சாலையருகில் செல்லுங்

கால் புகழேந்தியார், "அற்பர் அர்த்தராத்திரியில் குடைநிழலிற் செல்வர்" என்று உரத்துச் சொல்லினர். இஃது அரசன் செவிக்கெட்டியதும், அவன் ஒட்டக்கூத் தரை நோக்கி "இரவில் குடைபிடித்துத் தேவர்கள் அல் லவா செல்வார்கள்?" என்றுவினவ, ஒட்டக்கூத்தர் மௌ னம் சாதித்தார். அதுகேட்டிருந்த புகழேந்திப் புலவர் சமயோஜிதமான விடையை அளித்தனர். அரசன் பதிலு ரைத்தவர் புகழேந்தி என அறிந்து அக்கணமே அவரைச் சிறையினின்றும் நீக்கி, ஒட்டக்கூத்தருடன் அவரையும் யானைமீதேற்றிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றனன்.

இவற்றையெல்லாம்கேள்வியுற்ற பாண்டியன் மகளாகிய அரசனதுமனைவி ஒருநாள் கோபங்கொண்டு தனது அந்தப் புரவாயில் கதவைச்சாத்திக் கொண்டனள். அரசன் தனது இருபுலவரையும் அழைத்துக் கொண்டு தனது மனைவியின் அந்தப்புரத்துக்கேகினன். இராணியின்மனம்குளிரும்படி ஒட் டக்கூத்தரை ஒருசெய்யுள்பாடச்சொல்ல, அவரும்பாடினர். ஆனால் பண்டியன்மகள் "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்றுகூறி மற்றொருதாளையும் இட்டாள். அரசன் புகழேந்திப் புலவரை ஒரு செய்யுள் பாடச்சொல்ல, அவர் பாடினதும் இராணி கதவைத்திறந்த னள். பின்பு தனது ஆசிரியராகிய புகழேந்திப்புலவரை வணங்கி, ஆசீர்வசனமும்பெற்றாள்.

பின்பு ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவரின் அறிவு முதிர்ச்சியை ஒப்புக்கொண்டார். அதுமுதல் அவ்விரு வரும் பகைமைநீங்கி மிக்கநட்பினராய்க் கலந்து பலநாள் வாழ்ந்திருந்தனர்.

18629
சென்னை-600 00

# 9. ராணி சம்யுக்தை.

முன்னாளில் நமது நாட்டை க்ஷத்திரிய வம்சத்தவர்களே அரசாண்டு வந்தார்கள். இக்காலத்தில் உள்ள ராஜபுத்திரர்களும் அந்த வம்சத்தினரே. இவர்கள் மகாதைரிய சாலிகள். இவர்கள் இளம்பிராயத்திலேயே யுத்தப் பயிற்சியில் தேர்ந்து வந்தார்கள். இவர்கள் மகா உத்தமகுணமுடையவர்கள். ராஜபுத்திரமாதர்கள் மிக்க அழகுவாய்ந்தவர்கள். இவர்களுக்கு மானம் பெரிதேயொழிய பிராணன் பெரிதல்ல. இவர்களுக்குக் கணவர்களே தெய்வம். இந்த ஸ்திரீ ரத்னங்கள் தங்களது பதிமார் இறந்தால் தாங்களும் உடன்கட்டை ஏறிவிடுவார்கள்.

பன்னிரண்டாவது நூற்றாண்டில் நமது நாட்டின் கண் டில்லி ஆஜ்மீர் ஒன்று, கன்னோசி மற்றொன்று ஆக இரண்டு ராஜபுத்திர ராஜ்யங்கள் பிரபலமாய் இருந்தன. டில்லியில் பிருதிவி ராஜனும், கன்னோசியில் ஜயசந்தரும் ஆண்டு வந்தனர். பிருதிவிராஜன் யௌவனவயதுள்ளவன். மகாபராக்கிரம முள்ளவன். ஜயசந்தருக்குச் சம்யுக்தை என்ற ஒருபெண் உண்டு. இவள் மகாபுத்தியுள்ளவள்; எல்லா நற்குணங்களும் வாய்ந்தவள். இவளுக்குத் தக்க பருவம் வந்ததும் க்ஷத்திரிய வழக்கப்படி ஒரு சுயம்வரம் ஏற்படுத்தப் பட்டது. ஜயசந்தர் நாட்டிலுள்ள எல்லா அரசர்களுக்கும் தெரிவித்தார். குறித்த நாளில் அனைவரும் வந்தனர். பிருதிவிராஜன்மட்டும் வரவில்லை. ஆதலால் அவனை மானபங்கப் படுத்தக் கருதி, ஜயசந்தர் பிருதிவிராஜனைப்போல் ஓர் உருவத்தைச் செய்வித்து, அதற்கு வேலைக்காரனுடைய உடுப்பைப் போட்டு முதலில் வைத்திருக்கச் செய்தார்.

சம்யுக்தை தனது தோழிகளுடன் சுயம்வர மண்டபத்திற்கு மாலையுடன் வந்தாள். தோழிகள் ஒவ்வொரு அரசனுடைய பெயரையும், கீர்த்தியையும் சொல்ல, அவள் ஒருவருக்கும் மாலைசூட்டாது போய்க்கொண்டே இருந்தாள். கடைசியாக மாலையைப் பிருதிவி ராஜனது உருவத்திற்குச் சூட்டினாள். இவளது பிதாவுக்குக் கோபமுண்டது; தமது புத்திரியைச் சிறையிலிட்டார்.

இங்கு நிகழ்ந்தவற்றைக் கேட்ட பிருதிவிராஜன் ஒரு சேனையோடு வந்து, ஜயசந்தரைத் தோற்கடித்து, சம்யுக்தையை விடுவித்துக் குதிரைமீது எடுத்துச் சென்றான். இவர்கள் ஏற்கனவே பந்துவாகையால், மிக்க விமரிசையுடன் இருவருக்கும் விவாகமாயிற்று. ஜயசந்தர் எப்படியாவது பிருதிவியை ஒழித்துவிட வேண்டும் என்று எண்ணினர்.

கோரி என்னும் ஆப்கானிய அரசன் தனேச்வாத்தில் பிருதிவியிடம் யுத்தத்தில் தோல்வி அடைந்து மிக்க விசனத்துடன் தனது ஊருக்குத் திரும்பிவிட்டான். ஜயசந்தர் பிருதிவியைத் தோற்கடிக்கத் தாம் அவனுக்கு உதவிபுரிவதாய் வாக்களித்தார்; மீண்டும் இந்தியாவின்மீது படை எடுத்து வரும்படி அவனை வேண்டினர். அவனும் அப்படியே படையெடுத்துவந்தான். ஜயசந்தர் தமது சேனையைக் கோரிமுகம்மதுவின்சேனையோடு சேர்த்துக்கொண்டார். சம்யுக்தை ஆண்வேஷம்பூண்டு தனதுதந்தை இருக்கும் இடம் சென்று, தான் மகள் என்பதைத் தெரிவித்து, "பிதாவே, நமது நாட்டுக்கும், சுதந்தரத்துக்கும், மதாசாரங்களுக்கும், ஸ்திரீகளின் பதிவிரதா தர்மத்துக்கும் தீங்குறும்படி இவ்வடாத காரியத்தை என் புரிகின்றீர்? இனியாவது உங்களது சைன்னியத்தை அழைத்துக் கொண்டு செல்லுங்கள்"

என்று மன்றுடினுள். ஜயசந்தர் ஒன்றுக்கும் இணங்காமையால், சம்யுக்தை திரும்பிவிட்டாள். பிருதிவிராஜன் தனது பந்துஅரசர்களின்உதவி இல்லாமலேகோரிமூகம்மதுவுடன் தனேச்வரத்திலே இரண்டாம் முறை கடும்போர் புரிந்து யுத்தகளத்திலேயே மாண்டான். உடனே அவனது மனைவியாகிய சம்யுக்தை தீக்குளித்தாள். அன்று முதல் பாண்டவர்கள் ஸ்தாபித்த டில்லிமாநகரம் முஹம்மதியர்கள் கைவசமாய் விட்டது.

"சம்யுக்தை ஆடம்பரத்தை விரும்பாது ஆண்மையையே விரும்பினுள் என்பது இவ்வாலாற்றால் விளங்கும்."

---

## 10. அகல்யா பாய்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகின்கண் ஆண்பாலர், பெண்பாலர் இவ்விருவரும் சமானமானவர்களே. அப்படியிருக்க, சில நாடுகளில் ஆண்பாலர்களை மட்டும் கல்விகற்க வைத்தும், பெண்பாலர்களை மிருகங்கள்போல் பாவித்தும் அவர்களுக்குயாதொரு சுதந்தரமும் கொடுக்கிறதில்லை. இதுமதியீனமே அன்றி வேறில்லை. ஏனெனில் பலத்தினுலாகும் காரியங்களில் தவிர அறிவாலாகும் காரியங்களில் ஸ்திரீகள் புருஷர்களுக்குச் சமானமானவர்கள் என்றே தெரிந்து கொள்ளுகிறோம். மேல்நாடுகளில் பெண்கள் உயர்தரக் கல்விகற்று, தக்கபதவிகளில் வேலைபார்த்து ஊதியம் சம்பாதித்து வருகிறார்கள். சில தேசங்களில் பெண்களுக்கு அரசாளும் உரிமையும் உண்டு. காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரைப்போலஅவ்வளவுநீதிவழுவாமல் அரசாண்ட மன்னர்கள் சிலரே. பெண்பாலரிடத்தில்

தயை, சாந்தம், ஈகை, இரக்கம் முதலிய நற்குணங்கள் மிகுதியாகக் காணப்படும். நமது நாட்டின்கண் இந்தூர் என்னும் மஹாராஷ்டிர ராஜ்யத்தில் அகல்யாபாய் என்னும் அரசியார் முப்பது வருஷகாலம் அந்த இராஜ்யத்தை ஸ்ரீ ராமர் அரசாண்டதுபோல ஆண்டு வந்தார்.

அகல்யாபாய் மகா பராக்கிரமமுள்ள மல்ஹார்ராவ் ஹோல்காரின்மனைவி. ஹோல்கார்1765ம்ஆண்டு இறந்தார். அப்பொழுது முப்பதுவயதாயிருந்தஅவரது மனைவியாரைத் தவிர அவ்விராஜ்பத்திற்கு உரியவர்கள் எவரும்இல்லை. ஆதலின் துக்காஜி ஹோல்கார் என்னும் சேனைத்தலைவரும், மற்றும் உள்ள சிற்றரசர்களும் இவ் வம்மையையே அரசாள வேண்டும் என வேண்டினர்; இவரும் சம்மதித்துஅந்நாட்டுக்கு அரசியாயினர். இவர் காலத்தில் இவரது நாட்டில் கொள்ளை, கலகம், மாயத்திருட்டு முதலிய ஒன்றும் இல்லை. அந்நிய அரசர்கள் இவரதுநாட்டின்மீதுபடைஎடுக்கத்துணியவுமில்லை. மிகவும் சிறிய ஊராயிருந்த இந்தூர் என்னும் பிரதான பட்டணத்தைப் பெரிய நகரமாக்கினர். இவர்கற்றோரை ஆதரித்தார். தமதுநாடு செழிப்புற்றோங்கித் தம்முடைய பிரஜைகள் சுகமே வாழவேண்டும் என்பதே இவரது இரவுபகல் ஓயாத எண்ணம்.

இவரது மாசற்றஆட்சி மால்வாமாகாணம் முழுவதும் பரவிற்று. இவர் ஜனங்களுக்குமட்டும் அல்ல; மிருகங்களுக்கும், பக்ஷிகளுக்கும் உதவிவந்தார். இவர் தமது ஒழிவு நேரங்களில் புராணங்களைப் படித்து, தர்ம சாஸ்திரங்களைக் கற்றார். இவர் இதர மஹாராஷ்டிரர் ஸ்திரீகளைப்போல்முகமூடியிட்டு, உள்ளேயே பதுங்கிஇராமல், தர்பாரில் ஸிம்மாஸனத்தில் நாள்முழுவதும் வீற்றிருந்தார்; ராஜ்யவிஷயங்களைக் குறித்துச் சபையார்களுடனும், மந்திரிமார்களுட

னும் சம்பாஷித்துக் காரியங்களைச் செவ்வனே நடத்திவந்தார். இவருக்குத் தற்பெருமை என்பதே கிடையாது. ஒரு நற்காரியத்தைச் செய்ய வேண்டுமானால் என்ன கஷ்டங்கள் குறுக்கிட்டாலும் பிடிவாதமாகவே நின்று செய்து முடிப்பார். இவ்வரசியாரைப்போல் மனுநீதி தவறாமல் இந்தியாவில் அரசாண்ட மன்னர்கள் மிகச்சிலரே. இவரை அவதாரம் என்பாரும் உளர். இவர் 1795ம் ஆண்டு இவ்வுலகை நீத்தார்.

---

# 11. ஸ்வாமிவிவேகானந்தர்.

நமது தேசத்தில் நாஸ்திகர்கள் மேலிட்டு மதக்கொள்கைகளை அவரவர் மனம்போனவாறு மாற்றியும், வேறு மதக் கொள்கைகளை அனுசரித்தும் வரலாயினர். தொன்றுதொட்டு நம்முடைய முன்னோர்கள் அனுசரித்த(ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமானுஜர்முதலியமதாசாரியர்களால்சீர்திருத்தப்பட்ட) சைவவைஷ்ணவ மதங்களினின்று ஜனங்கள் விலகிப் பிறர் மதங்களில்சேர அவாஉண்டாகும் பொழுது, அவதார புருஷர்கள் தோன்றி நமது மதத்தை அழியாமல் நிலைநிறுத்தி வருகிறார்கள். அங்ஙனம் சமீபகாலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதரித்தார். இவர் தாமே நாடெங்கும் சென்று ஜனங்களுக்குப் போதியாது தம்முடைய சீடர்களைக் கொண்டு அந்த அரியகாரியத்தை நடத்திவந்தார். அவர்களுள் முதன்மையானவர் ஸ்வாமி விவேகானந்தர்.

ஸ்வாமி விவேகானந்தர் வங்காளத்தைச் சேர்ந்த கல்கத்தாநகரிலே 1862ம் வருஷம் ஜனவரி மீ 6ம் தேதி தத்தர்என்னும் காயஸ்தர் குடும்பத்தில் பிறந்தார். இவரது

தகப்பனார் விஸ்வநாததத்தர். தாயார் புவனேஸ்வரி. இவ்விருவரும் தங்களுக்கு நெடுநாள்வரையில் புத்திரப்பேறு இல்லாமையால் காசிவிசுவேசுவரரைப் பூஜித்து வந்தார்கள். ஈசனதுகிருபையால் இவர்களுக்கு ஒரு சற்புத்திரர் பிறந்தார். அவருக்கு இளமையில் வீரேசுவரர் என்றும், பள்ளிக்கூடத்தில் நரேந்திரநாதர் என்றும் பெயர். இவரது பாட்டனார் முதுமையில் ஸந்நியாஸம் பெற்றார். இவரது தந்தையார் கல்கத்தா ஹைகோர்ட்டில் வக்கீலாக இருந்தார். இவரது தாயாரோ மகா ஞாபகசக்தியுள்ளவர்.

"விளையும் பயிர் முளையிலே" என்பதுபோல் இவர் பாலப்பருவ முதல் கஷ்டப்படும் ஏழைகளுக்கு அனுதாபப்பட்டு, அவர்களுக்குத் தம்மாலியன்றவரையில் உதவிசெய்து வந்தார். இவர் கல்லூரியில் படிக்குங்கால் வேதாந்த விசாரணைகளைச் செய்து அடிக்கடி பத்திரிகைகளில் தமது அபிப்ராயத்தைப் பிரசுரிப்பார். B. A. பரீக்ஷையில் தேறியபிறகு நாஸ்திக மதத்தை அனுசரித்தார். அம்மதம் தமது கொள்கைகளுக்கு மாறாக இருந்தமையால் அதை விட்டு விட்டுத் தமக்குத் தத்துவப்பொருளைப் பற்றிப் போதிக்குமாறு பல ஆசிரியர்களை அடைந்தார். ஒருவாராலும் இவருக்கு அங்ஙனம் போதிக்க இயலவில்லை. கடைசியாய் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரை அடைந்தார். அவரைக்கண்ட மாத்திரத்தில் இவருக்குக்கடவுளிடமிருந்த அவநம்பிக்கையெல்லாம்போய் விட்டது. பரமஹம்ஸரும் இவரையே தமக்கு இயைந்த சிஷ்ன் எனக் கொண்டனர். விவேகானந்தர் இவரிடம் இணைபிரியாத சிஷ்யராகவே இருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் காலம் ஆனபிறகு விவேகானந்தர் துறவறத்தைமேற்கொண்டு, ஹிமாசலத்தை அடைந்தார்; தனிமையில்நிஷ்டையிலிருந்து தத்துவஆராய்ச்

சி செய்தார். அப்பால் இவர் திபேத்நாடு சென்று பௌத்த மதக்கொள்கைகளைத் தெரிந்து கொண்டார். பிறகு இவர் நமது தேசத்தில் ஆங்காங்குப் பிரசங்கங்களைச் செய்து கொண்டு சென்னைக்குவந்தார். மாகாணம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் பண்ணினூர். சென்னையிலுள்ள பலகனவான்கள் பொருள் கொடுத்து இவரை ஐக்கியமாகாணத்தில் சிகாகோ என்னும் நகரில் நடந்த மதசம்மந்தமான மகாசபைக்குப் போகும்படி வேண்டினர். ஸ்வாமி விவேகானந்தர் அவர்களது வேண்டுகோளின்படி அங்குச் சென்று வாசமகோசரமாய் ஹிந்துமதக் கொள்கைகளை எடுத்துப்பிரசங்கித்தார். அஃது அங்குவந்திருந்தகற்றறிவாளர் அனைவரையும் "இவர் கடவுளால் அனுப்பப்பட்ட தெய்வீகபுருஷரோ" என ஐயுறும்படி செய்தது. அங்கு வந்திருந்த பெரியோர்கள் இவ்வுத்தமர் உதித்த நாட்டிற்குக் கிறிஸ்தவப்பாதிரிமார்களை அனுப்புவது மதியீனம் என்று உரைத்தனர். இவருக்கு அமெரிக்காவில் விசேஷ உபசாரங்கள் நடந்தன. சில ஸ்திரீ புருஷர்கள் இவருக்குச் சிஷ்யர்கள் ஆனூர்கள். அப்பால் இவர் இங்கிலாந்துக்குச் சென்று மூன்றுமாதங்கள் அங்குத்தங்கி இடைவிடாது மதப்பிரசங்கங்களைச் செய்து வந்தார். இவர் சொல்வதில் சிலர் பூர்ண நம்பிக்கை வைத்து இவருக்குச் சிஷ்யர்கள் ஆனூர்கள். இவரது பிரசங்கங்களின் பெருமையைப் பத்திரிகைகளிலிருந்து தெரிந்து கொண்ட நமது நாட்டுத்தலைவர்களாலும், ஏனையோராலும் தமதுஜன்மபூமிக்குத் திரும்பிவந்த "இவர் அவதாரபுருஷர்" என்று போற்றப் பட்டுப் பல வரவேற்புப் பத்திரங்களைப் பெற்றூர். இவரது பெருமை முன்னையைக் காட்டிலும் பல நூறுமடங்கு அதிகரித்தது.

இவர் இரண்டு பிர்மசாரி மடங்களை ஸ்தாபித்தார். தமது குரு ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெயரால் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினர். அதில் ஒரு பகுதியார் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி புரிந்து வருகிறார். இவர் தேகசௌக்கியத்திற்காக மீண்டும் இங்கிலாந்து,அமெரிக்கா முதலிய குளிர்ச்சியான நாடுகளுக்குச் சென்றார். தேகசௌகரியம் அடைந்ததும் பாரிஸ் நகரத்தில் பிரெஞ்சு பாஷையில்இந்து வேதாந்த சாஸ்திரத்தை எடுத்துப் பிரசங்கித்தார். அப்பால் அசௌக்கிய மடைந்து தமது தாய்நாட்டிற்குவந்தார்.

1902ம் வருஷம் ஜூலை மீ 2ம் தேதி சிந்தனையில் மிகவும் ஆழ்ந்திருந்தார். அப்போது இவருக்குத் தேகம் திடமாயிருந்தது. அன்று பிற்பகலில் வெளியில் உலவச் சென்றார். திரும்பியதும் நிஷ்டையில் இருந்தார். இரவு ஒன்பதுமணிக்குப் பரமபதம் அடைந்தார். இம்மஹான் அளித்த நல்லுபதேசமே நமது நாட்டு இப்போதைய ஆங்கிலக் கல்வியாளர்களில் பலர் மதாபிமானிகளாக இருப்பதற்குக் காரணம்.

---

## 12. தாதாபாய் நௌரோஜி.

நமது தேசத்தில் மேலைக் கடற்கரையில் இருக்கும் பம்பாய் நகரம் கல்வியிலும், கைத்தொழிலிலும், தன தான்ய சம்பத்திலும் முதன்மையானது. இஃதுஒரு பெரிய வர்த்தக ஸ்தலம். இதில் பார்ஸி என்ற ஒரு ஜாதியார் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கள் வர்த்தகத்தில் விசேஷ பாண்டித்தியம் உள்ளவர்கள். "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்பதுஇவர்கள்கைக்கொண்டவர்கள் இவர்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் முதிர்ச்சி அடைந்தவர்கள்.

இவர்களது முன்னோர்கள் பாரசிகத்தில் வசித்தவர்கள். முகம்மதியமதம் பரவுங்கால், அவர்கள் பயந்து இந்தியாவுக்கு ஓடிவந்தார்கள். இவர்களில் அநேகர் மிகக் கற்றவர்கள். அவர்களில் முதன்மையானவரும், பிரபலமாயிருந்தவரும் நமது பெருங்கிழவராகிய தாதாபாய் நௌரோஜியே.

நௌரோஜி பார்சி குருக்களின் வம்சத்தில் 1825-ம் ஆண்டிற்பிறந்தார். இவர் இவரது நான்காம்பிராயத்தில் தந்தையை இழந்தமையால், இவரது அன்னை இவரைப்போற்றி வளர்த்தார்; இவருக்குத் தக்ககல்வி கற்பித்து, நன்மார்க்கத்தில் நடத்திவந்தார். இவருக்குத் தமது தாயினிடத்தில் அன்பு மிகுதி. அக்காலத்தில் கல்வி இலவசமாயிருந்ததால் ஏழையான இவர் செவ்வனே கற்றார். இவர் கதைகள் சொல்லுவதில் மிகச் சிறந்தவர். மனக்கணக்கைத் துரிதமாய்ப் போடுவதில் முதன்மையானவர். இவர் வகுப்பில் அநேக பரிசுகளைப் பெற்றார். இவர் ஓயாது புத்தகங்களையே படித்துவந்ததால் எழுதுவதிலும், பேசுவதிலும் மிகத் தேர்ச்சியடைந்தார்.

அப்பால் இவர் தாம்படித்த சிறு பாடசாலையைவிட்டு எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார். அங்கும் உபகாரச் சம்பளம் பெற்றுவந்தார். தமது இருபதாவதுவயதில் B.A. பரீக்ஷையிலேதேறி மேற்குக் கரையிலிருந்த மாணவர்களில் மகா புத்திமான் எனப் பெயர்பெற்றார். அக்காலத்தில் பம்பாய் ஹைகோர்ட்டில் முதல் நியாயாதிபதியாயிருந்த எர்ஸ்கின்பெர்ரி என்னும் துரை இவரைச் சீமைக்கு அனுப்பி வக்கீல் பரீக்ஷைக்குப் படிக்கச்சொல்லிப் பாதிச்செலவை ஒப்புக்கொண்டார். ஆனால் அக்காலத்தில் சீமைக்குச்சென்றால் கிறிஸ்தவர் ஆகிவிடுவாரோ என்று இவர் அனுப்பப்படவில்லை.

முதலில் இவர் தாம்படித்த கல்லூரியிலேயே இரண்டாவது உபாத்தியாயராகவும்; அப்பால் கணிதம், பிருகிருதி சாஸ்திரம் இவைகளைக் கற்பிக்கும் உபாத்தியாயராகவும் நியமிக்கப்பட்டார். இவருக்குத் தேசாபிமானம் மிகுதி. ஆதலால் பம்பாயில் பெண்கள்கற்க முதல்முதல் ஒரு பாடசாலையை ஏற்படுத்தினர். இவர் ஒரு குஜராத்திப் பத்திரிகையைப் பிரசுரிக்க ஏற்பாடுசெய்தார். பம்பாயில் காமா என்பவர் ஒரு வர்த்தக பண்டகசாலையை ஏற்படுத்தி நௌரோஜியைக் கூட்டாளியாகச் சேர்த்துக்கொண்டார்; இங்கிலாந்தில் ஒரு கிளைப்பண்டகசாலையைஏற்படுத்த இவரை இங்கிலாந்திற்கு அனுப்பினர். நௌரோஜி அங்குச்சென்று இந்தியர்களுக்குள்ள கஷ்டநிஷ்டூரங்களை ஆங்கிலேயர்களுக்குத் தெரிவித்தார். I. C. S. பரீக்ஷைக்கு இந்தியர்களும் வரலாம் என்பது இவரது உழைப்பால்தான் ஏற்படலாயிற்று. இவர் அநேக சங்கங்களை இந்தியர்களுக்காக ஸ்தாபித்தார். இவர் அங்கும் ஒரு பத்திரிகையை ஏற்படுத்தி இந்தியர்களுடைய சுயஆட்சி சம்பந்தமாக எழுதிவந்தார். இவர் லண்டன் கல்லூரியில் குஜராத்தி பாஷையைக் கற்பிக்கும் ஆசிரியாகவும் நியமிக்கப்பட்டார்.

இவர் அப்பால் சொந்தத்திலேயே வியாபாரஞ்செய்தார். இவர் ஒருசமயம் தமது நண்பருக்கு மூன்று லட்சம் ரூபாவைக் கடனாகக் கொடுத்தார். ஆனால் அந்த நண்பர் இவரை ஏமாற்றிவிட்டார். இவர் தமது கையிலிருந்து சிலருக்குப் பணம் கொடுக்கவேண்டியதாயிற்று. அவர்களுக்கு இவரது யோக்யதை தெரிந்தமையால் இவருக்கு அவகாசம் கொடுத்துப் பெற்றுக்கொண்டாகள். இவர் 1869ம் வருஷம் மீண்டும் இந்தியாவுக்குவந்தார். இவருக்குப் பம்பாயில் வரவேற்புப் பத்திரிகை படிக்கப்பட்டது. 1873-ம் வருஷத்தில் மறுபடியும் இங்கிலாந்துசென்று “இந்தியர்கள்

ஏழைகள் என்றும், அவர்களுக்கு வருஷத்தில் ஒவ்வொரு வருக்கும் சராசரி ரூ. 20 தான் கிடைக்கிறது என்றும், ஆங்கிலேயர்கள் ஏராளமான வரியைப்போட்டு இந்தியர்களை மிகவும் ஏழையாகச் செய்கிறார்கள் என்றும் ஒரு கமிஷனர் முன்னால் சாக்ஷியம் சொன்னார். இவர் மீண்டும் இந்தியாவிற்கு வந்தவுடன் பரோடாவில் இவருக்குத் திவான் உத்தியோகம் அளிக்கப்பட்டது. இரண்டுவருஷம் அங்குஉழைத்த பிறகு, பம்பாய்ச் சட்டசபையில் ஓர் அங்கத்தினராகஆனார். 1885ம் வருஷம் முதல்காங்கிரஸ் பம்பாயில் நடந்தபொழுது அதற்காக மிகவும் உழைத்தார். 1886ல் இவரையே காங்கிரஸ் அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். 1892ல் இங்கிலாந்திலுள்ள காமன்ஸ்சபையில் மெம்பராகத்தெரிந்து எடுக்கப்பட்டார். இந்தியர் முதல்முதலாக இதற்கு நியமிக்கப்பட்ட சமயம் இதுவே. இவர் அச்சபையில் மூன்று வருஷகாலம் தமது தாய்நாட்டுக்காக உழைத்தார். இவரை ஒன்பதாவது காங்கிரஸுக்கும் அக்கிராசனாதிபதியாகத் தெரிந்து எடுத்தார்கள். இவர் சில கமிஷன்களில் அங்கத்தினராகவும், சிலவற்றில் சாட்சியாகவும் இருந்து பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். இவரைமீண்டும் மூன்றுவது தடவையாகக்காங்கிரஸ் அக்கிராசனாதிபதியாகத்தெரிந்தெடுத்தார்கள். இவரை "இந்தியாவின் மகா வைபவமுள்ள கிழவர்" என்று ஜனங்கள் கூறுவார்கள். இவர் 1917ம் ஆண்டு தமது 92-வது வயதில் தாய்நாட்டாரும், பிறநாட்டாரும், உற்றார் உறவினர்களும் துக்கமுறும்வண்ணம் இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக்கு ஏகினார்.

# 13 மகாதேவ கோவிந்தராநடே.

ஸிவாஜி காலமுதல் மஹாராஷ்டிரத்தில் அநேக மேதாவிகள் தோன்றிவந்தார்கள். மஹாராஷ்டிர அரசர்களுக்குப் பிறகு மந்திரிகளாய் இருந்த பீஷ்வாக்களே அரசாண்டனர். அவர்களில் சிலர் சரித்திரத்தில் மகா கீர்த்திபெற்றிருக்கிறார்கள். மகாதேவகோவிந்தராநடே என்பவரும் அப்பீஷ்வாக்கள் உத்தியோகம் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவரே.

ராநடே 1842ம் ஆண்டு சாதாரண சம்பத்துள்ள குடும்பத்தில் பிறந்தார். இவர் சிறுவயதுமுதல் நற்குண நல்லொழுக்கம் உடையவர். இவர் முதலில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மஹாராஷ்டிர பாஷையைக் கற்றார். இவருக்குத் தமது ஜாதியாரிடத்தில் அன்பு மிகுதி. ஸிவாஜியைப் பற்றி அடிக்கடி பெருமையாகப் பேசுவார். இவரது ஒன்பதாவது வயதில் கோலாப்பூர் பாடசாலையில் ஆங்கிலம் கற்கச் சென்றார். பதினான்காவது வயதில் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார். 1862ல் பி.ஏ. பரீக்ஷையில் முதல்வகுப்பில் தேறினார். அப்பால் மூன்று வருஷங்கள் கழித்து எம். ஏ. பரீக்ஷையிலேதேறித் தங்கப்பதக்கமும் பரிசுபெற்றார். பம்பாய் வித்யா இலாகா சங்கத்தின் அங்கத்தினராக ஆனார். இவரது 42-ம் வயதில் வக்கீல் பரீக்ஷையில் மிக்க கௌரவத்துடன் தேறினார். இவருக்கு மராட்டி, ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் பாண்டித்தியம் அதிகம்.

இவர் முதலில் வித்யா இலாகாவில் மஹாராஷ்டிர பாஷையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் உத்தியோக

ஸ்தராகவும், அப்பால் கோலாப்பூர் இராஜாங்கத்தின் கார் பாரியாகவும், பின்பு தாம் கற்ற கல்லூரியில் இங்கிலீஷ் உபாத்தியாயராகவும் நியமிக்கப்பட்டார். சட்டப் பரிக்ஷை யில் தேறியதும் முதலில் ஸப்ஜட்ஜ்ஆகவும், பின்புராஜதானி மாஜிஸ்டிரேட்டாகவும், இறுதியில் பம்பாய் ஹை கோர்ட்டு ஜட்ஜாகவும் ஆனுர். இவர் ஜட்ஜாக இருந்தது மனுச் சக்கர வர்த்தியே நியாயாதிபதியாய் இருந்ததுபோல் இருந்தது.

இவருக்குத் தேசாபிமானம், மதாபிமானம் முதலியன அதிகம். இவர் இராஜாங்க உத்தியோகஸ்தராய் இருந்த மையால், கோபாலகிருஷ்ண கோகலேயைத் தமது தாய் நாட்டுக்காக உழைக்கத் தயார் செய்தார். இந்தியர்களு டைய வறுமையை நீக்கவும், தாழ்ந்த ஜாதியாருக்குக் கல்வி கற்பிக்கவும், கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யவும் உழைத்தார். இவர் எக்காலத்திலும் இராஜாங்கத்திற்கு விரோதமாக ஒன்றும் சொல்லுவது இல்லை. இவரது அபிப் பிராயங்கள் நடுநிலையாகவே இருக்கும். இவர் 1901ம் வரு ஷம் தமது நாட்டார் வருந்த விண்ணுலகஞ்சென்ருர்.

---

## 14 பச்சையப்ப முதலியார்.

இப் பரதகண்டம் தொன்றுதொட்டுத் தர்மத்திற்குப் பெயர் பெற்றது. 'தர்மம் தலைகாக்கும்' என்னும் பழமொழி யைக் கைக்கொண்டு தோட்டிமுதல் தொண்டைமானுக வுள்ள எல்லோரும் தம்மால் இயன்ற அளவு தர்மம் செய்து வந்திருக்கிருர்கள். இன்னும் பலர் தர்மம் செய்துவருகிருர் கள். 'அறஞ்செய விரும்பு' என்று ஔவையார் கூறியுள்ள

படி சிலர் கோயில்கள் கட்டியும், குளங்கள் வெட்டியும், சிலர் பிரயாணிகளுக்காக அன்னசத்திரங்கள் அமைத்தும், சிலர் பிரயாணிகளுக்காக ரஸ்தாக்கள் போடுவித்தும், சிலர் மரங்கள்வைத்துப் பயிராக்கியும் இருக்கிறார்கள். இத்தகைய பல தர்மங்களைப் புரிந்து என்றும் அழியாச் சிறப்புப்பெய ரைப் பெற்ற பெரும்புகழாளர் பச்சையப்ப முதலியார்.

பச்சையப்ப முதலியார் 1754ம் வருஷத்தில் காஞ்சி புரத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தை விசுவநாத முதலியார். தாய் பூச்சி அம்மாள் என்பவர். இவரது பிதா இவர் கர்ப்பத்திலிருக்கும்போதே காலகதி அடைந்தார். இவருக்கு இரண்டு மூத்த சகோதரிகள் உண்டு. புருஷன் இறந்ததும் பூச்சி அம்மாள் தமது மூன்று குழந் தைகளையும் இட்டுக்கொண்டு பெரியபாளையம் என்னும் ஊரில் தங்களது குடும்பத்துக்கு வேண்டியவரான ரெட்டி யார் என்னும் அந்தணரை அடைந்தனர். பச்சையப்பமுதலி யாருக்கு ஐந்து வயதானதும் ரெட்டியார் காலமும்ஆயிற்று.

'பட்டகாலிலே படும்; கெட்டகுடியே கெடும்' என்ற படி பூச்சி அம்மாளுக்குக் கஷ்டம் அதிகமாயது. இவர் நிரா தரவாகித் தம்முடைய குழந்தைகளை அழைத்துக்கொண்டு, தம்மிடமிருந்த சொற்பப் பொருளுடன் சென்னைக்குச் சென்றனர். அப்பொழுது பச்சையப்ப முதலியார் கொஞ் சம் தெலுங்கு மட்டும் கற்றிருந்தார். அக்காலத்தில் சென்னை யில் ஆங்கிலேயர்கள் பண்டகசாலையை அமைத்துக்கொண்டு வியாபாரஞ் செய்துவந்தார்கள். சென்னையில் நாராயணசாமி பிள்ளை என்னும் யாதவ கனவானிடத்தில் பூச்சி அம்மாள் தம்முடைய குழந்தைகளுடன் அடைக்கலம் புகுந்து, தம திடம் இருந்தபொருளை அவரிடம் கொடுத்துத் தங்களைக் காப்பாற்ற வேண்டினர். அவரும் அங்ஙனமே அங்கீகரித்து,

அந்த அம்மாளைத் தமது சகோதரியைப்போல் பாதுகாத்து வந்தார்.

பச்சையப்ப முதலியார் சென்னைக்கு வந்ததும், கொஞ்சம் ஆங்கிலபாஷையைப் பேசக் கற்றுக்கொண்டார். இவர் கொஞ்சகாலம் தரகராக இருந்து, அப்பால் நிக்கொலஸ் என்னும் வர்த்தகனுக்குத் துபாஷியானார். பின்பு ஆங்கிலேயர்களுக்குக் கொஞ்சம் ராஜ்யம் ஏற்பட்டதும், செங்கற்பட்டு ஜில்லாவில் நிலவரி வசூலிக்க நியமிக்கப்பட்டார். அவருக்கு அப்பொழுது கிடைத்த பொருளைக்கூடக் காஞ்சீபுரத்தில் சிவாலய கைங்கர்யத்தில் செலவிட்டார். பின்பு கர்நாடகத்துரைத்தனத்தில்ஸிவில்உத்தியோகஸ்தானவிலிவன் என்பவரிடம் துபாஷியாகஇருந்தார். அவருக்குஅநேக சௌகரியங்களைச் செய்து மிகக் கீர்த்தியும் பெருஞ்செல்வமும் பெற்றார். கடைசியாகத் தஞ்சை அரசனால் துரைத்தனத்தாருக்குக் கிடைக்கவேண்டிய பகுதிப் பணத்தை வசூல் செய்து கொடுக்கும் காரியதரிசியானார். தமது தமக்கை மகள் ஐயாள் அம்மாளை மணந்தார்.

இவர் மிக அழகுவாய்ந்தவர். திடகாத்திரமுடையவர். இவரிடம் வஞ்சனை, சூது, பொய் மொழிதல் முதலிய துர்க்குணங்கள் ஒன்றும் கிடையாது. இவர் ஏராளமான பொருளைச் சம்பாதித்தார். சந்ததி இல்லாமையால் பல க்ஷேத்திரங்களில் அந்தணர்களுக்காக அக்கிரகாரங்களைக் கட்டினார்; மானியங்களை விட்டார்; சிவ, விஷ்ணு ஆலயங்களில் கட்டளைகளை ஏற்படுத்தினார்; அநேக பாடசாலைகளை வைத்தார்; இன்னும் பல தர்மங்களைக் காசிமுதல் இராமேஸ்வரம் வரையில் செய்திருக்கிறார். இவருடைய தர்மத்தை நடத்துவதற்காகச் சில கனவான்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையில் ஒரு காலேஜூம், காஞ்சீபுரத்திலும், சிதம்பரத்

தியும் ஒவ்வொரு ஹை ஸ்கூலும், இவரது பெயரால் இவரது தனத்தைக்கொண்டு நடந்துவருகின்றன. இவர் தமது 40ம் வயதில் பரிபூரண தசையை அடைந்தார்.

---

## 15 ஆறுமுகநாவலர்.

நமது தமிழ்நாட்டில் தமிழ் ஆசிரியர் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களில் சைவசமயத்தினரும் உண்டு; வைஷ்ணவ சமயத்தினரும் உண்டு. சமீபகாலத்தில் அவ்வாறு சைவ சமயத்திற்கும், தமிழ் வளர்ச்சிக்குமாக உழைத்து மேம்பாடடைந்த ஆசிரியர் ஆறுமுகநாவலர் என்னும் மேதாவியே. இவர் இலங்கைக்கு வடக்கிலுள்ள யாழ்ப்பாணம் என்னும் தீவிலுள்ள நல்லூரில் 1822ம் வருஷம் டிசம்பர் மாதம் 19ம் தேதி வேளாளர் மரபில் கந்தர், சிவகாமி என்னும் தம்பதியார்களுக்குப் புத்திரராகப் பிறந்தார். அவர்களுக்குப் பிறந்த எட்டுக்குழந்தைகளில் இவரே கடைசிப் புத்திரர்.

இவரது தந்தை இளம்பிராயத்திலேயே இவரைத் தக்க ஆசிரியர்களிடம் தமிழ் கற்க ஏற்பாடு செய்தார். இவர் மிகவும் நுட்பபுத்தியுள்ளவர் ஆதலால், 'விளையும்பயிர் முளையிலே' என்பதற்கிணங்க, மிகவும் தீவிரமாகக்கற்றுத் தேர்ச்சி அடைந்தார். அப்பால் ஆங்கிலம் கற்க ஒரு பாதிரியாரிடம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆங்கும் ஐந்தாறு வருஷங்களுக்குள் அப்பாஷையிலும் தேர்ச்சி அடைந்தார். அப்பள்ளிக்கூடப் பாதிரியார் தமக்குத் தமிழ் கற்பிக்க இவரைவேண்ட, இவரும் அவருக்குக் கற்றுக்கொடுத்தார்.

இவருக்குப் பொருளிலாவது, பதவியிலாவது இச்சையில்லை. பொருளைச் சகோதரர்களுக்குக் கொடுத்துவிட்டார்; தாமடைந்திருந்த தமிழ்ப்பண்டித பதவியையும் விட்டுவிட்டார். இவர் அக்காலத்தில் ஆங்கிலம் கற்றிருந்ததற்கு உயர்ந்த பதவிகள் கிடைத்திருக்கும். ஆயினும் இவர் அவைகளைப் பொருட்படுத்தவில்லை. இவருக்குப் பொருள், ஆபரணங்களுடன் மணக்கக் கன்னிகைகள் வந்தும், இவர் அவைகளை மதியாமல் சைவசமய வளர்ச்சியிலும், தமிழ்ப் பாஷை அபிவிர்த்தியிலும் நோக்கமாயிருந்தார்.

இவர் எண்ணிய முதல்எண்ணம் இவருக்குக் கைகூடாததுபற்றி வருந்தினர். 'தம்மிலும் சக்தி உடையவர்கள் சைவசமய அபிவிருத்தியை நாடாமல் இருக்கிறார்களே, அதில் மனமிருக்கும் தமக்கு சிவபெருமான் வல்லமையை அளிக்கவில்லையே'என ஏங்கினர். அப்பால் தமது காலத்தை உலகத்தாருக்குப் பயன்படச் செய்யவேண்டும் என்று சில சிறுவர்களுக்குத் தமிழ்ப் பாஷையை ஊதியம் பெறாமல் காலையிலும், மாலையிலும், இரவிலும் கற்பித்துவந்தார்.

பின்பு வண்ணார்பண்ணை என்னும் ஊரிலுள்ள சிவாலயத்தில சைவப்பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அப்பால் அவ்வூரிலேயே சைவப்பிரகாச வித்தியாசாலையை ஸ்தாபித்தார். ஓர் அச்சியந்திரத்தை வாங்கச் சென்னைக்குச் சென்றார். வண்ணார்பண்ணையில் 'வித்யாநுபாலன அச்சியந்திரசாலையை' ஸ்தாபித்தார். இவர் சென்னையில் இருக்கையில் பிரதி சுக்கிரவாரமும் சைவசமயத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்துவந்தார். அந்நகர் பிரமுகர்கள் இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு வந்தார்கள். இவர் தெற்கே யாத்திரை செய்து வருங்கால் அக்காலத்தில் சைவசமயத்தை மிகவும் பக்தியுடன் அனுஷ்டித்துவந்த திருவா

வடுதுறை ஆதின கர்த்தர்களால் வரவேற்கப்பட்டார். அங்கே பல வித்வான்கள் இவருடன் சைவசித்தாந்தங்களைப்பற்றிப் பற்பல ஆக்ஷேபணைகளைச் செய்தார்கள். அச்சந்நிதானத்தார் இவரது சொல்வன்மையையும், இலக்கண இலக்கிய ஆராய்ச்சியையும் மெச்சி, இவருக்கு "நாவலர்" எனப் பட்டம் அளித்தார்கள்.

நாவலர் சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றை ஸ்தாபித்தார். அஃது இப்பொழுதும் செவ்வனே நடைபெற்றுவருகிறது. அப்பால் அக்காலம் சிதம்பரத்திலிருந்த இராமலிங்கசுவாமிகள் அவர்களுக்கும் இவருக்கும் இருந்த வேறுபாடுகளை நீக்கும்பொருட்டு ஒரு மகாசபை கூட்டப்பட்டது. பின்பு இம்மகான் தாம் செய்யவேண்டிய வேலைகளை முடித்த பிறகு 1879ம் வருஷம் டிசம்பர் மாதம் 6வ தில்லை நடராஜாவின் திருப்பாதத்தை அடைந்தார். இவர் செய்திருக்கும் நூல்களும் பிரசங்கங்களும் பல. அவைகளை இன்னும் மாணவர்களும் வித்வான்களும் கற்று வருகிறார்கள்.

---

## 16. ஔவையார்.

நமது பரதகண்டத்தில் முன் நாளில் ஆண்பாலர், பெண்பாலர் இவ்விருவரும் செவ்வனே கற்றறிந்து இருந்ததாகப் புராணங்கள் மூலமாய் நமக்குத் தெரிகிறது. இக்காலத்தில் சிலர் ஆண்மக்கள் மட்டும் கற்கவேண்டும் என்றும், பெண்மக்கள் கற்கலாகாது என்றும், அங்ஙனம் கற்றால் அவர்கள் கட்டத்தை வேறுபாடு ஆகும் என்றும் கூறுவது விந்தையிலும் விந்தை. கற்றால் அல்லவோ அறிவுமிகும், அறிவு

யிருந்தால் அல்லவோ நன்னடத்தை உண்டாகும். ஆதலால் யாவரும் கசடறக் கற்கவேண்டும்.

முன்னாளில் கற்ற பெண்மணிகளில் மிக்க கீர்த்திவாய்ந்தவர் ஔவையாரே. இவரை ஸரஸ்வதியின் அவதாரம் என்று சொல்வாரும் உளர். ஔவையார் ஆதி, பகவன் என்ற இருவர்கட்குப் பிறந்த குழந்தைகளில் ஒன்று என்றும் கூறுவார். இவர் பிறந்ததும் பெற்றோர்களின் ஏற்பாட்டின்படி தாய் குழந்தையை எடுக்காது செல்லும்பொழுது திரும்பிப் பார்த்தனள். இவர்களுடையகுழந்தைகள் பிறந்தவுடன் பாடும் வன்மையுள்ளனவாதலின் ஔவை,

"இட்டமுடன் என்றலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனுஞ் செத்துவிட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ."

என்று சொன்னார். இக்குழந்தையை ஒரு பாணர் எடுத்து வளர்த்தார். ஒருசமயம் கம்பர் ஒரு தாசிமேல் இரண்டடி பாடி ஐந்நூறு பொன்னைப் பெற்றார். ஆயினும் அவனது வறுமை நீங்கவில்லை. ஔவையார் மற்ற இரண்டடிகளையும் பாடிக் கூழ்பெற்றார். அத்தாசியும் செல்வவதியாயினள். இதைக் கேள்வியுற்ற கம்பர் ஔவையாரை மானபங்கம் செய்யக்கருதி "ஒருகாலில் நாலிலைப் பந்தலடி" என்று கூறி ஔவையைப் பதிலளிக்குமாறு நோக்கினர். ஔவையார் கோபமுண்டு கம்பரது "கர்வத்தை அடக்க"

"எட்டேகா லட்சணமே யேமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
யாரையடா சொன்னா யது."

என்றுகூறி மானபங்கப்படுத்தி அவர்கேட்டதற்குப் பதிலும்

"ஆரைக்கீரை" என்று கூறினர் என்றும் ஒரு கதை வழங்கு கிறது. இருவர் ஔவையார் உண்டு என்று எண்ணவும் இடமிருக்கிறது. ஒருநாள் ஔவையார் ஓர் ஊரில் சென்று ஒரு பாழடைந்த சாவடியில் இரவில் படுத்தனர். அங்கு ஒவ்வோர் ஜாமத்துக்கும் ஒரு பெண் பைசாசம் 'எற் றெற்றெற்று' என்று சப்தித்துக்கொண்டு ஔவையை நோக்கி ஓடிவந்தது. இவர் ஒவ்வொரு ஜாமத்துக்கும் ஒவ் வொரு வெண்பாவைப் பாட இவரை ஒன்றும் செய்யாது ஓடிவிட்டது.

நான்காம் ஜாமத்தில் முன்போலவே அப்பெண் பைசாசம் ஓடிவர ஔவையார் ஒரு செய்யுளைப் பாடினர். பின்பு அது தனது வரலாற்றை எடுத்துரைக்க ஔவையார் "நீ இச்சித்த புருஷனை உறையூரில் அடைவாய்" என்றனர். அப்பால் ஓர் ஆண் பைசாசம்வந்து ஔவையாரை வணங்க, ஔவையார் "நீ இச்சித்த இராஜ குமாரத்தியைச் சீக்கிரம் அடைவாய்" என்று அனுக்கிரகித்துச் சென்றனர். ஒருநாள் ஔவையார் பசியால்வருந்திப்பெண்ணை நதிக்கரைக்கருகில் செல்லுகையில் மழை மிகுதியாகப்பெய்து நனைந்துகொண்டு ஒரு குடிசைக்குள் சென்றார். அவ்வீட்டிலிருந்த இரண்டு பெண்களும் இவரை உபசரித்து வேறு ஆடை கொடுத்துக் கூழும் அளித்தனர். ஔவையார் மனம் பூரித்து அவர் களைச் செல்வவந்தர்களாக்கி அவர்களுக்கு வெகு விமரிசை யுடன் மணமுடித்தனர்.

அப்பால் ஒருநாள் ஔவையார் பசியால் வருந்தி ஓர் ஏழைவீட்டில் கூழ்கேட்க, அம்மனையான் ஒருதுஷ்டையை மணந்திருந்தமையால், உள்ளே சென்று அவளுக்கு மிக்க உபசாரணைசெய்து, ஔவையாருக்கு அன்னமிட வேண்டினன். அவள் மிக்க சீற்றங்கொண்டு அவனைப்

படாதபாடு படுத்திப் பின்பு ஔவையாருக்கு அன்னமிட்டாள். ஔவையார் உடனே,

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணுக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது."

என்று பாடினர். அவ்வில்லானுக்கு "இம் மனையாளோடு கூடி வாழ்வதிலும் சந்நியாஸம் கொள்வதே மேல்" என்றும் போதித்துச் சென்றனர்.

ஒருநாள் ஔவையார் தாகத்தால் வருந்தி ஒரு நாக மரத்திலிருந்த பையனை தமக்குச்சில நாகப்பழங்கள் போடும்படிக் கேட்க, அவ்வாலிபன் "பாட்டி, சுடும்பழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? எனக் கேட்டான். ஔவையார் "தம்பி, பரிகாசம் செய்யாதே; சுடாத பழங்களே போடு" என்றனர். அவன் ஒரு கிளையைக் குலுக்க, கனிந்த பழங்கள் மண்ணில் விழுந்தன. அவைகளை ஔவையார் எடுத்து மண்போக ஊதித்தின்றனர். மரத்தின்மேலிருந்த அப்பையன் "பாட்டி, சுடுபழம் தின்றனையோ" என்றான். அப்பொழுதுதான் சுடுபழம் என்றால் கனிந்தபழம் என்று ஔவையார் உணர்ந்தனர். மரத்தில் பையனாக இருந்த முருகக்கடவுள் ஔவையாருக்குத் தரிசனம் தந்தார்.

ஔவையார் தமது தம்பி திருவள்ளுவருடன் மதுரைக்குச் சென்று அங்கிருந்த சங்கப்புலவர்கள் அவரது திருக்குறளைச் சிறப்பிக்கச் செய்தனர் என்றும் கூறுவார். இவர் இருநூற்று நாற்பது ஆண்டுகள் ஜீவித்து இருந்ததாகக் கூறுகின்றனர்.

இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய அநேக ஞானமார்க்கத்தைப் போதிக்கும் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். வேறு தனிப்பாக்களும் உண்டு.

---

## 17. தாயுமானஸ்வாமிகள்.

தென்னாடுகளிற் சிறப்புற்ற சோழ மண்டலத்திலே வேதாரணியம் என்னும் சிவஸ்தலம் ஒன்று உள்ளது. இதில் சற்றேறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வேளாள குலதிலகரான கோடிலியப்பபிள்ளை என்றொருவர்இருந்தார். அவர் அந்த சிவஸ்தல விசாரணையைச் செய்துவந்தார்.

அந்தக் காலத்தில் திருச்சிராப்பள்ளியில் அரசுபுரிந்து வந்த விஜயரகுநாதசொக்கலிங்கநாயகர் கோடிலியப்பபிள்ளையின் நற்குண நற்செய்கைகளையும், கணக்கு வல்லமையையும் கேள்வியுற்றார். அவரைத் தம்மிடம் அழைத்துப் பரீக்ஷை செய்தார். அவருக்குப் பெரிய சம்பிரதி உத்தியோகத்தை அளித்தார். அக்கோடிலியப்பபிள்ளையின் தமையனாருக்குச் சந்ததி இல்லாமையால், தமது ஏகபுத்திரனை ஸ்வீகாரம் செய்துகொடுத்தார். அப்பால் தமக்குச் சந்ததி இல்லாமையால், புத்திரப்பேறு உண்டாகவேண்டும் என்று திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தாயுமானேசுவரரைத் தினம் தினம் வணங்கிப் பூஜைசெய்து வந்தார். அக்கடவுளது திருவருளால் இவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்குத் தாயுமானவர் என்று பெயரிட்டார்.

இக்குழந்தை சிறு பிராயத்திலேயே பல நூல்களைக் கற்று, உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் முதலிய நற்குணங்களோடு இருந்தார். இவரது மனம் தாமரை இலைமீதுள்ள நீர்போன்ற இவ்வுலகச் சிற்றின்பங் களில் நாடாது பேரின்பத்தையே நாடிற்று. இவர் மௌன தேசிகர் என்ற பெரியவரிடம் உபதேசம் பெற்றார். அது முதல் இவர் தினந்தோறும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிலேயே நிஷ்டை செய்துகொண்டு வந்தார்.

இவர் தமது தந்தை தேகவியோகம் அடைந்ததனால் அரசன் இவரை இவரது தந்தையின் பதவியில் அமர்த்தி னன். ஆனால், 'கழைக்கூத்தனது மனம் தன்னைக் காப்பதி லும் அவனுடைய செய்கைகள் கூத்திலும் எப்படிப் பதிந் திருக்குமோ' அப்படியே தாயுமானவரது மனம் சிவனிடத்தி லும் அவருடைய செய்கைகள் ராஜாங்கஉத்தியோகத்திலும் இருந்தன. இவரது மகிமையை அறிந்துகொண்ட அரசன் இவரைத்தான் வேலை வாங்கியதற்காகத் தன்னை மன்னிக்கு மாறு வேண்டினான்; இவரது நிஷ்டை குறைவுபடாம லிருக்கத் தன்னாலாகிய உதவிகளைச் செய்யக் காத்திருப்ப தாயும் உரைத்தான். அன்றுமுதல் இவர் அரசனால் உபசரிக் கப்பட்டு, ஞானயோகத்திலே இருந்து கடவுளையும், தமது குருவையும் மதுரமான பாடல்களால் பாடித் துதித்து வந் தார். இப்படியிருக்க அவ்வரசன் இறந்தான்.

அரசனது மனைவி தாயுமானவரது திருமேனியின் அழ கைக் கேள்வியுற்றார்; அரண்மனைக்கு இவரை அழைத்துப் பார்த்தார்; மதிமயங்கினார். இதையறிந்த தாயுமானவர் மெல்லத் தப்பிப்பிழைத்து இராமநாதபுரத்துக்குச் சென்றார். அப்பால், இவரது பந்துக்களின் வேண்டுதலினால் கலியா ணம் செய்துகொண்டார். இவரது மனைவி ஓர் ஆண் மக

வைப் பெற்றுச் சிவபதம்அடைந்தார். பின்பு இவர் கௌபீனதாரியாய்ச் சிவஸ்தலங்கள்தோறும் சென்று கடவுளைக் குறித்து அற்புதமான பாடல்களால் பாடினார். சச்சிதானந்த சொரூபராகிய சிவத்திலே கலந்தார். இவர் மனிதர்கள் 'மெய்ஞ்ஞானஒளியைப்பெற்று இன்புறவேண்டும்' என்று பல பாடல்களைப் பாடி இருக்கிறார்.

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போகம்எனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய்
ஏகஉருவாய்க் கிடக்கிது அந்தோ இன்புற்றிடநாம் இனிஎடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே."

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே."

முற்றிற்று.

# 5-ஆம் வகுப்பு.

## I (a) ஸ்தோத்திரப் பாடல்கள்.

### 1. விநாயகர்.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
§நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புதநின்ற கற்பகக் களிறே!

❋ ❋ ❋ ❋ ❋

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

### 2. ஸரஸ்வதி.

† தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
‡ தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்தருள் நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

---

§ நான்ற-தொங்கின; †தாவறு-குற்றம் அற்ற; ‡தேவு-கடவுள்.

## 3. சுப்பிரமணியர்.

(1) கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர்தங்கள் அடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசி வாயவென்று தினமுநினை யாமல்நின்று
அறுசமய நீதியொன்றும் அறியாமல்
*அசனமிடு வார்கள்தங்கள் மனைகள்தலை வாசல்நின்று
அனுதினமும் நாணமின்றி அலைவேனோ?
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாள் அரங்கர்
உலகளவும் மால்மகிழ்ந்த மருகோனே!
உபயகுல தீபவங்க விருதுகவி ராஜசிங்கம்
உறைபுகலி யூரிலன்று வருவோனே!
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த குமரோனே!
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமானே!

(2)பாதிமதிநதி போதுமணிசடை நாதனருளிய குமரேசா!
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம்வருடிய மணவாளா!
காதுமொருவிழி காகமுறவருள் மாயனதுதிரு மருகோனே!
காலனெனையணு காமலுனதிருகாலில்வழிபட அருள்வாயே!
ஆதியயனொடு தேவர்சுரருல காளும் வகைதரு சிறை§மீளா
ஆடுமயிலினில் ஏறியமரர்கள் சூழவலம்வரும் இளையோனே!
†சூதமிகவளர்சோலைமருவு சுவாமிமலைதனில்உறைவோனே!
சூரனுடலற ‡வாரிசுவறிட வேலைவிடவல பெருமாளே!

---

*அசனம்-ஆகாரம்; §மீளா-மீட்டு; †சூதம்-மாமரம்; ‡வாரி-கடல்

## பொது.

1. மற்றுப்பற்றெனக் கின்றிநின் றிருப் பாதமே
   மனம் பாவித்தேன்;
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மை
   வந் தெய்தினேன்;
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற்
   பாண்டிக் கொடுமுடி
நற்றவா! உனை நான்மறக்கினும் சொல்லும்நா
   நமச்சிவாயவே—(தேவாரம்)

2. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
   கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
   மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம்சிவனைத்
   திருவீழி மிழலைவீற் றிருக்கும்
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
   குளிரஎன் கண்குளிர்ந் தனவே—(திருவிசைப்பா)

3. உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
   நிலைநி றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யான் அவன்
   தலைவன்; அன்னவற் கே சரணங்களே.
—(கம்பராமாயணம்)

4. அறக்கடல் நீயே அருட்கடல் நீயே
   அருங்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே திருக்கடல் நீயே
   திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே நிகர்கடந் துலகில்
நிலையும்நீ உயிரும்நீ நிலைநான்

181629

பெறக்கடல்நீயே தாயும்நீ எனக்குப்
பிதாவும்நீ அனைத்தும்நீ யன்றே?—(தேம்பாவாணி)

5. அங்கிங் கெனாதபடி எங்கும்ப்ர காசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது; தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது; மனவாக் கினில்
தட்டாமல் நின்றதெது; சமயகோ டிகளெல்லாம்
தந்தெய்வம் எந்தெய்வ மென் [று]
எங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது;
எங்கணும் பெருவழக் காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளதெது; மேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுளதெது; அது
கருத்திற்கிசைந்த ததுவே;
கண்டனவெலா மோன வுருவெளிய தாகவும்
கருதியஞ் சலிசெய்குவாம். ——(தாயுமானர்)

6. தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டி
சர்க்கரையும் கற்கண்டும் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொரு தீம்பருப் பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியிலும் இனித்திடுதெள்ளமுதே!
அநித்தமறத் திருப்பொதுவில் விளங்கும்நடத் தரசே!
அடிமலர்க்கென்சொல்லணியாம்அலங்கலணிந்தருளே
—(திருவருட்பா)

7. ஆரா வமுதே! அரசே! ஆநந்தவெள்ளப்
போரறே! மோனப் பெருக்கே! பராபரமே!

8. சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே! பராபரமே!
9. அன்பைப் பெருக்கி யெனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே! இறையே! பராபரமே! [நெஞ்சம்
10. எண்ணுத வெண்ணமெலாம் எண்ணியெண்ணியேழை
புண்ணுகச் செய்ததினிப் போதும் பராபரமே!
11. பாராயோ என்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே!
——தாயுமானுர்

## தேசாபிமானப் பாடல்கள்.

### கும்மி—மெட்டு.

1. ஓங்கும் இமாசலம் ஒளிர்முடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம்.
2. கண்டங்களெங்கும் காணும் நற்காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம்.
3. நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர் சாரும் சிறப்புச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம்.
4. மன்னனைத் தெய்வமாக் குடிகளும்,மன்னவன்
மன்னுயிர் தன்னுயிர் ஆகவுமே
மதித்து வரும் பெரு மாண்புசேர் இந்திய
மாதா! உனக்கு நமஸ்காரம்.

5. ஞால மெங்கும் வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம்.

"பாராயோ என்னை முகம்"—என்ற மெட்டு.

1. மன்னவரில் ராமன் மனுவோ டரிச்சந்திரன்
இன்னவர் நற்கீர்த்தி இசைந்த பெருநாடிதுவே.
2. பின்னரும் அசோகர் ஆக்பர் சிவாஜியோடு
நன்னய விக்டோரியா நாட்டம்வைத்த நாடிதுவே.
3. மங்கையரில் சந்திரமதி சீதை தமயந்தி
இங்கிவர் பேர் என்றும் இலங்கும் நன்னாடிதுவே.
4. பாலரில் மார்க்கண்டன் பரதன் அபிமன் சீர்
சாலும் துருவனிவர் தாம் விளங்கும் நாடிதுவே.

இங்கிலீஷ் நோட்டு—மெட்டு.

1. எங்கள் தெய்வத் திருநாடு—உல
கெங்கும் ஒளிசெய் திருநாடு.
2. பங்கஜம் மலரும் திருநாடு—பல
பங்கமில் காட்சித் திருநாடு.
3. தங்கும் தருமத் திருநாடு—சாது
சங்கம் தழைக்கும் திருநாடு.
4, பொங்கும் கலைசேர் திருநாடு—இதைப்
போற்றித் தினமும் மனம் நாடு.

அறுசீர் விருத்தம்.

சிந்தை நல்லருளால் ஈசன் சேர்பவர்க் குதவும் வண்ணம்
வந்துறு மன்னர் இந்து மகமது கிறிஸ்து ஆதி
எந்தநன் மதத்தாரேனும் இசைந்தவர்க் காட்சி நல்கும்
இந்தியத்தேவி பாதம் என்றுநாம் வணங்கி வாழ்வாம்.

ஆநந்தக்களிப்பு.

வாழிய பாரத தேவி—என்றும்
வாழி அவள் புகழ் மகிதலம் மேவி (வாழிய)
வாழி நம்முள் தேச பக்தி—நாளும்
வாழி அதனுடன் நம்ராஜ பக்தி (வாழிய)
வாழி ஜார்ஜ் மன்னவர் வாழி—மிக
வாழி அரசியல் வழிவழி வாழி. (வாழிய)

## II (b) இலக்கணம்.

IV வகுப்பிற் சொன்னதை விஸ்தரித்தல்—பெயரெச்சம் வினை யெச்சம்; வாக்கிய அமைப்பும் மாற்றலும்.

## III. செய்யுட்பாடம்:—குறள்.

1. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.
2. அருளிலார்க் கவ்வுலக மில்லை; பொருளிலார்க்
கிவ்வுலக*மில்லாகி யாங்கு.
3. செல்வத்துட்செல்வம் செவிச் செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.
4. இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்.
5. தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்த பின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.
6. அடக்கம் அமாருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.
7. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.
8. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்

---

* இல்லாகி யாங்கு—இல்லையானாற் போல.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அறியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

10. *உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

11. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

12. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.

நாலடியார்.

1. குஞ்சி யழகும் †கொடுந் ‡தானை கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு.

2. கல்வி கரையில; கற்பவர் நாள் சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல; தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய §கற்பவே நீ ரொழியப்
பாலுண் †குருகிற் றெரிந்து.

3. களர் நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

4. முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள;
பின்னரும் பீடழிக்கும் நோயுள;—‡கொன்னே
பரவன்மின் பற்றன்மின் §பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

---

*உடுக்கை—உடை; †கொடும்—வளைந்த; ‡தானை—ஆடை.
§கற்ப—கற்பார்; †குருகு—நீர்ப்பறவை; ‡கொன்னே—வீணாக
பாத்து—பகுத்து;

8]

5 நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

6 புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம் நிரப்பினும்—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

7 கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவின ரீங்கில்லை—¶நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயால் மீட்டு.

8 நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருளொன்றோ? தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றா லாகுங் குலம்.

9 ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறம்; நெறி ஆபோல்
உருவு பலகொள லீங்கு.

16 நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
‡புல்லிதழ் பூவிற்கு முண்டு.

---

¶நீர்த்து—குணமுடையது. ‡புல்லிதழ்-புற இதழ்.

## பழமொழி.

1 பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதை தன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
||நுணலுந்தன் வாயாற் கெடும்.

2 மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை
நாய்காணிற் கற்காணு வாறு.

3 உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னுகி—நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

4 நெறியால் உணராது நீர்மையு மின்றிச்
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று.

5 கன்றி முதிர்ந்த §கழியப்பல் நாட் செயினும்
என்றும் சிறியார்கண் என்னுனுந் தோன்றுவாம்;
ஒன்றுய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு.

## நளவெண்பா.

1 நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு. [மங்கையர்கள்

---

||நுணல்-தவளை. §கழிய-மிகுதியாக;

2 செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.

3 விண்ணரச ரெல்லாரும் வெட்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
†வன்மாலை தம்மனத்தே சூடவய வேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

4 ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றும்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

5 கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினான்; அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர்.

6 ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண் ¶தாளப்
பூத் ‡தாம வெண்குடையான் பொன்மகளைத் தன் [மனத்தே
நீத்தானென் றையுறேல் நீ.

7 பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும் மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களைஇங் கில்லாத வர்.

8 மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
‖புக்கெடுத்து வீரப் புயத்தணையா—"மக்காள்! நீர்
என்மக்கள் போல்கின்றீர்; யார்மக்கள்?" என்றுரைத்
வன்மக் களியானை மன். [தான்

---

†வன்மாலை-வலிய மயக்கத்தை ¶தாளம்-முத்து;
‡தாமம்-மாலை ‖புக்கு—புகுந்து.

9 "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்;
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்" என்றார் அழுது.

10 கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ உரைப்பேன் எதிர்.

## சமரசக் கீர்த்தனை.

இராகம் நாதநாமக்கிரியை—ஆதிதாளம்.

பல்லவி.

இந்த வரந் தருவாய்—சுவாமி!
இந்த வரந் தருவாய்.

அநுபல்லவி.

பந்த வினையெல்லாம் அறவேண்டும்—உன்
பாத தெரிசனம் பெறவேண்டும். (இந்த)

சரணங்கள்.

தினமும் பாதமலர் தொழவேண்டும்—நான்
தேக பரவசமா யெழவேண்டும்;
அனல் மெழு காயுருகி யழவேண்டும்—இனி
ஆனந்தக் கடலில் நான் விழவேண்டும். (இந்த)

தேகவிஷ யாதிகள் கெடவேண்டும்—ஞான
தீபத்தை என்னுளத்தில் இடவேண்டும்;
பாக அறப்பயிரை நடவேண்டும்—அந்தப்
பயிர்க்குள் அருட்புனலை விடவேண்டும். (இந்த)

போகப்பி சாசுதனை வெலவேண்டும்—நல்ல
புத்தி நெறியிலே செலவேண்டும்;
நாகமெனும் புலனைக் கொலவேண்டும்—வேத
நாயகனே! உன்னுமஞ் சொலவேண்டும். (இந்த)

இராகம் சங்கராபரணம்—ரூபகதாளம்.

பல்லவி.

பணமே! உன்னால் என்ன குணமே—தண்டம்
பண்ணினேன் சற்றும்என் கண்ணில்முன் நில்லாதே(பண)

அநுபல்லவி.

மணமில்லா மதமோகங்குரோதந்துன்
மார்க்கமும் மூர்க்கமும் யார்க்குமே போதிக்கும் (பண)

1. தேடி உனைவைத்து மூடிய வர்க்குநீ
தீர்க்காயுசு தரு வாயோ—இனி
நாடி யமன்வந்து சாடிடும் போது நீ
நானென்று முன்வரு வாயோ?
கூடிய பேர்கள் குடியைக் கெடுப்பாயே;
கொல்லச்சொல்லிப் பின்னுங் காட்டிக் கொடுப்பாயே;
ஓடி ஓடி யற்பரைப்போ யடுப்பாயே;
உத்தமரைக் கண்டால் ஓட்டம் எடுப்பாயே. (பண)

2. மத்தியில் உன்னைப் படைத்ததல் லால்முன்
வரும்போது கூடவந் தாயோ?—இஷ்ட
சித்தியும் சத்தியும் நித்தியங் கைகூடச்
சிலாசாசனம் நீதந் தாயோ?
புத்தி யிருக்கும் இடம்விட்டு நீங்குவாய்;
பொய்யும் புரட்டும் உள்ளஇடத் தோங்குவாய்;
எத்திசை யும்கெடுத் துப்பழி வாங்குவாய்;
ஈயாதவர்கை யகப்பட்டுத் தூங்குவாய். (பண)

3. மண்ணில் உனைநரர் பண்ணின தன்றி
மனிதரை நீபண்ணி னாயோ?—உயர்
விண்ணினை மண்ணினைப் பண்ணினோன் நேசம்
விலகச்செய் சத்துரு நீயே;
எண்ணரி தான இடமெங்கும் ஓடுவாய்;
இந்திர ஜாலஞ் செய்துவிளை யாடுவாய்;
வண்ண நரர்கள் மனக்கண்ணை மூடுவாய்:
வைத்துப் புதைப்பவர் வாயில்மண் போடுவாய் (பண)

4. வஞ்சக மாயப்பிர பஞ்சமெல் லாம்நீ
வளைத்துச் செய்வாய் கொடுங் கோன்மை;
நஞ்சம் நிகருனை நெஞ்சம்எண் ணுதமெய்ஞ்
ஞானிகட் கல்லவோ மேன்மை;
பஞ்சமா பாதகங் கட்குநீ ஆலயம்;
பாரில் துன்பமென்ப தெல்லாம்உன் றன்மயம்;
மிஞ்ச உனையுடை யோர்க்கொழியாப் பயம்;
வேத நாயகன்மே லுனக்குண்டோ ஜயம். (பண)

## நந்தனார் சரித்திரம்.

### இராகம் செஞ்சுருட்டி—ஆதிதாளம்.

1. சிதம்பரம் போகாமல் இருப்பேனோ—இந்த
ஜென்மத்தை வீணாக்கி கெடுப்பேனோ?
பத்தியுமனமும் பொருந்தினதங்கே?
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கே;
ஆசையும் நேசமும் ஆனந்தமங்கே;
பேசலும் பாசமும் பிதற்றலும் இங்கே. (சிதம்)

### இராகம் பியாகு—ஆதிதாளம்.

பல்லவி

இதுதானோ தில்லைத்தலம்—இத்தனை நாளுமறியேன்
இதுதானோ தில்லைத்தலம்.

அதுவோ யிதுவோவென் றலைந்திடும் பேயனைக்
கதிதரு வேனென்று கைகாட்டி யழைத்திடும் (இதுதா)
காசினி யிலிதைக் கயிலையென் றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிப்பார்த் தறிந்திலேன்(இது)

இராகம் மாஞ்சை—ரூபகதாளம்.

வருகலாமோ ஐயா உந்தன் அருகில் நின்றுகொண்
டாடவும் பாடவும் நான் (வரு)
பரமகிருபா நிதியல்லவோ—இந்தப்
பரையனுபசாரஞ் சொல்லவோ—உந்தன்
பரமாநந்தத் தாண்டவம் பார்க்கவே நானங்கே (வரு)
பூமியில் புலையனுகப் பிறந்தேனே நான்
புண்ணியஞ் செய்யாமலிருந்—தேனே
சாமியுன் சந்நிதி வந்—தேனே—பவ
சாகரத்தையு மிழந்—தேனே
கரைகடந்தேனே சரண மடைந்தேனே—தில்லை
வரதா! பரதாபமும் பாபமுந் தீரவே. (வரு)

## இராம நாடகம்.

சௌராஷ்டிர ராகம்—ஆதிதாளம்.

பல்லவி.

1 மகுடாபிஷேகங் கொண்டானே—ஸ்ரீராமச்சந்த்ரன்
மகுடாபிஷேகங் கொண்டானே

அனுபல்லவி.

சகல ராஜர்களும், சகல தேவர்களும்,
சகல வேதியரும், சகல ஜாதியரும்,
சகல மந்திரிகளும், சகல தந்திரிகளும்,
சகல முனிவர்களும், சகல மனிதர்களும்,
சந்திராதி மூவர்களும், இந்திராதி தேவர்களும்,
சந்தோஷமாய்ப்பொருந்தச் சிங்காதனத்திருந்து(மகு)

மாதவர்கள் முனிவர்கள் புடைகூடப்
பலபல வேதவேதியர்கள் மறைபாட
வானவர் ஆனவர் மலர்போட
ரம்பை மேனகை ஊர்வசி நடம் ஆட (மகுடா)
மாதலத்துள்ள தீர்த்தமும் ஓது சமுத்திர தீர்த்தமும்
வரிசையுடன் அனுமான் மொண்டுவர
சோதிமிக்க ஆலாத்தி மீதிலக்ஷுமிப் பெண்கள்
சுபசோபனம் சொல்லிக் கொண்டுவர, (மகுடா)
வானகத்தில் அமிர்தத்தை மானமிக்க முனிவர்கள்
மகிழ்ந்து மகிழ்ந் தாசிகள் விண்டுவர
ஞானமிக்க நாரதர் கானவித்தை முறைமுறை
நானுவிதம் பாடிக் கண்டுவர், (மகுடா)
மகதர் குகதர் பலர்; கவுடர் யவனர் பலர்;
வடுகர் குடகர் பலர்; துளுவர் வளவர் பலர்;
* * * * *
வாமாபராக்கு! வெகுநாமா பராக்கு!
ரணவீரா பராக்கு! ரகுராமா பராக்கு! என (மகுடா)
* * * *

## தனிப்பாடல்கள்.

1 எண்ணான்கு முப்பத்திரண்டுபல் காட்டி இசையுடனே
பண்ணுகச் செந்தமிழ் பாடிவந்தாலும் இப் பாரிலுளார்
அண்ணுந்து கேட்பர்; அழகழ கென்பர்; அதன்பிறகு
சுண்ணும்புபட்டஇலையுங்கொடார்கவிசொன்னவர்க்கே
இராமச்சந்திர கவிராயர்

2 வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா ;

கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
  கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்வில்லா லடித்த புண்ணும்
  பாரென்றே காட்டி நின்முன் பரமன்முனே. ஷை—

3 அரிதரிது மானிடராத லரிது;
மானிட ராயினுங் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது;
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந் தவமுந் தான்செயலரிது;
தானமுந் தவமுந் தன் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.—ஔவையார்.

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேஷை.

4 ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேயிரையும்;
மூடித் திறக்கின் முகங்காட்டும்:—ஓடிமண்டை
பற்றிற்பரபரெனும்; பாரிற்§பிண் ணாக்குமுண்டாம்;
உற்றிடும்பாம் பெள்ளெனவேயோது. (காளமேகப்புலவர்.)

5 ஆனவ னிடத்திலே யைங்கரன் வந்துதான்
  'ஐய! என் செவியை மிகவும்,
அறுமுகன் கிள்ளினு' னென்றே சிணுங்கிடவும்,
  அத்தன்வே லவனை நோக்கி,
விரைவுடன் வினவவே 'அண்ணனென் †சென்னியில்
  விளங்குகண் ணெண்ணினன்' என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி
  விகடமேன் செய்தா யென,

§பிண்ணாக்கு—பிளவான நாக்கு; †சென்னி—தலை.

'மருவு மென் கைந்நீளம் முழமளந் தான்' என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரைய னுதவவரும் உமையவளை நோக்கி "நின்
மைந்தரைப் பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டங்
கருப்பமாய்ப் பெற்ற கன்னி
கணபதியை யருகழைத் தகமகிழ்வுகொண்டனள்
களிப்புடனுமைகாக்கவே. —சிவப்பிரகாச சுவாமிகள்.

IV.(a) நாடகம்நடித்தல். மேல்4-ஆம் வகுப்பிற் போலவே.
தேச சரிதப் பகுதிகளை அதிகமாக நடித்தல்.

IV. (d) உயர்ந்த வசன பாகங்கள் ஒப்பித்தல்.

(1) §அறிவு வளர்ச்சி.

இந்து தேசம் போல் பூமியில் வெகு தேசங்கள் உள வென்றும் மதிநுட்பமும் விஷயங்களை அறிதற்குரிய இச்சையும் உழைப்பும் மனிதர்களுக்குப் பொதுவான குணங்களேயொழிய ஒரு நாட்டிற்குள்ளே உற்பத்தியாகிற சாதனங்கள் அல்லவென்றும் உணர்ந்தவர்கள் அன்னிய தேசவாசிகள் வழியாயும் நாம்அறியததக்கவைபலவும் இருக்கும் என்று ஒப்பாதொழியார். அப்படி ஒப்புதல் நமது முன்னோர் மேல் வைக்கத்தக்க பக்திக்கு இழுக்கும் அன்று. கேவலம் மதி நுட்பத்தால் மாத்திரமன்றித் தூரதேச சஞ்சாரத்தாலும் கருவி விசேஷத்தாலும் விளைகிற அனுபவப் பெருக்கால் அறியத்தக்கவைகள் பூமியின் பாலிய காலமாகிய பழைய காலத்தில் அறியப்பட வில்லையென்று கூச்சம் இன்றிக் கூறுவதில் குறை யென்னை! ஒருதேசத்தார் விஷய ஆராய்ச்சியை விட்டு யாதேனும் ஒரு காரணத்தால் ஒய்வடைந்தாராயின் மற்றெல்லாத் தேசத்தாரும் அப்படியே ஒய்வடைந்தார் ஆகவேண்டியதில்லையே. வித்

§ திருவநந்தபுரம் Professor P. சுந்தரம் பிள்ளை, M. A.

தியா ரூபிணியாகிய கலைமகள் நாடோறும் தூக்கமின்றிக் கல்வி பயில்கிருள் என்பதின் பொருள் தான் என்னே? ஆதலால் பூர்வீகர்கள் மேல் உண்மையான பக்தியும் தேசாபிமானமும் உடையோர் முன்னோர் நூல்களை அன்புடன் ஆராய்வதோடு, நூதனமாக அன்னிய தேசத்தாரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் நூல்களையும் கற்றறிந்து கலந்து "பழையன கழிதலும் புதியன, புகுதலும் வழுவல கால வகையி ஞனே" என்னும் முதுமொழியை மறவாது அவரவர்களால் கூடிய அளவு நம் முன்னோர் உழைத்தபடி உண்மை அறிய உழைத்து ஜனசமுதாய அறிவை வளர்க்கக் கடமைப் பட்டவர்களாக இருக்கிருர்கள்.

2) §வீதிவிடங்கன் சரித்திரம்.

காவிரி என்னும் நதியினுல் எந்தக்காலத்திலும் குறைவுபடாதநீர்வளப்பமுள்ளதாய் வாழைச்சோலை, பலாச்சோலை மாஞ்சோலை, தென்னஞ்சோலை, கமுகஞ்சோலை, கருப்பஞ் சோலை, முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்கப்பெற்றதாய், சிதம்பரம், மத்யார்ச்சுனம், பஞ்சநதம், ஜம்புகேசுவரம் முதலான திவ்ய க்ஷேத்திரங்களை இடையிடையில் உள்ளதாய், விளங்குகின்ற சோழதேசத்திலே, திருவாரூர் என்று ஒரு நகரம் உண்டு. அந்நகரத்திலே, மூன்று சுடர்களிலும் முதற்சுடராகி மேன்மையடைந்த சூரியகுலத்திற் பிறந்து, அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களிற் சிறந்தவராய், எல்லாவுயிர்களுக்கும் இதம் செய்கின்றவராய், வேதமோதுதலும், யாகஞ்செய்தலும், இரப்பவர்க்கீதலும், பிரஜைகளைக்காத்தலும், ஆயுதவித்தையிற் பழகுதலும், பகைவரை யழித்தலும் என்னும் ஆறு தொழிலும் உடையவராய், வழக்கை யறிவிப்பவரையும், தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லிக்

§மனுமுறை கண்டவாசகம்—ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.

கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக்குறைகளை முடித்தும் கொடுப்பவராய்,பாலொடுபழஞ்சேர்ந்தாற்போலமுகமலர்ச்சியோடு இனிய வசனம் சொல்பவராய், தர்மமே உருவாகக்கொண்டு நடுநிலையிலிருந்து மனுநீதிதவமுது விளங்கிய மனுச்சோழன் என்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர் செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்து வந்தார்.

†கடன்படல்.

பொருளில்லையானல் கூலித்தொழில் செய்து வயிறு வளர்க்கினும் வளர்க்கலாம்; பிச்சையேற்று உண்ணினும் உண்ணலாம்; பசிநோயால் வருந்தி இறக்கினும் இறக்கலாம்; இவைகளெல்லாம் அவமானங்களல்ல; இவைகளினலே பிறருக்கு யாதொரு கேடுமில்லை. இவைகளினல் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை, இவைகளினலே துண்பமுண்டாகினும் அத்துன்பமோ மிகச்சிறிது. அச்சிறு துன்பமும் நல்லறிவோடு அமைந்து சிந்திக்கும்போது நீங்கிவிடும். கடனே இப்படிப்பட்டதன்று, பெருவியாதி முதலிய கொடுநோய்களினல் உண்டாகும் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம்; கடனுலுண்டாகும் துன்பத்தைப் பொறுத்தல் அரிது அரிது. கடன்படக் கூசாதவர் பொய் சொல்லக் கூசார்; பொய் வழக்குப் பேசக்கூசார் விசுவாசகாதகம் செய்யக்கூசார், கொலை செய்யக்கூசார். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைபிடித்தழைக்கும் தூது

IV. வாசகம்:—ஒரு அங்கீகாரமான வாசக புஸ்தகமும் மற்றொரு தகுதியான உப புஸ்தகமும்.

தமிழ்ப் பாடதிட்டம் முற்றிற்று.

---

†நான்காம் பால பாடம்—ஆறுமுக நாவலர்.

18/679

I have read with great interest & pleasure the two volumes of "MAHANGALINCHARITHAM" published by Messrs T. K. Subramaniam & Son Kumbakonam for use in Elementary Schools. The work is in accordance with the recent Syllabus issued by the Educational Officers of this district & has been carefully done. The matter, presentation, printing and binding are all good and the price is also moderate. Another good feature of this book is the appendix at the end containing *songs* suited to school children. These books are *just* what Elementary Schools require, (I mean by this the teachers and pupils) to infuse life and vigour into their work. I wish them all success and wide popularity

(Sd) **V. Muthuswami Aiyer,** M.A. L.T.,

Tiruvalur
1-2-1925.

*Dy. Inspector of Schools,*
NEGAPATAM RANGE.

"MAHANGALINCHARITHAM" Nos. 1, 2 and 3, I have seen through. The publishers have shown indeed nice discrimination and judgment both in the choice of matter and treatment. The youngsters for whom the books are intended are sure to profit by their study. The stories given are simple, interesting and instructive and the language employed is quite suitable I have no doubt that the books, excellent as they are, will be widely used.

Town High School
Kumbakonam
26—2—25

**(Sd)R.Swaminatha Ayyer**
*Headmaster.*

உ

# மஹான்களின் சரிதம்.

| | |
|---|---|
| மஹான்களின் சரிதம் மலர் 1 | 0—2—6 |
| மஹான்களின் சரிதம் மலர் 2 | 0—3—0 |
| மஹான்களின் சரிதம் மலர் 3 | 0—4—0 |
| மஹான்களின் சரிதம் மலர் 4 | 0—5—0 |
| மஹான்களின் சரிதம் மலர் 5 | 0—6—0 |

எஸ். எக்ஞசாமி ஐயர் போட்ட

| | |
|---|---|
| பாபா பாலசிக்ஷை பாகம் 1 | 0—2—0 |
| பாபா பாலசிக்ஷை பாகம் 2 | 0—2—0 |

எங்களிடம்மேற்கண்ட புஸ்தகங்களும், ஸ்கூல், காலேஜ் இவைகளுக்கு வேண்டிய இங்கிலீஷ், தமிழ், ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும் தமிழ், இங்கிலீஷ், நாவல்களும், ஸ்கூல் ஸ்டேஷனரி சாமான்களும் மிகவும் நயமாய்க் கிடைக்கும்.

குறிப்பு:— உபாத்தியாயர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

**T. K. Subramaniam & Son,**
*Publishers, Book-Sellers & Stationers,*
*Dabir Square,*
**KUMBAKONAM.**

RTR/144